33 33

31 MAY 1937

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௪.] ஈசுவரஹு வைகாசிமீ [பகுதி-எ.
Vol. 34. May—June 1937. No. 7.

### உள்ளுறை.

பாரதீய ஸாஹித்ய பரிஷத்தின் முதல்வருஷமஹாநாட்டு வரவேற்புப்பிரசங்கம்:— மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் ஸ்ரீமத் உ. வே. சாமிநாதையர். ௨0௩—௨௧௬
யவனர்வரலாறு:—ஸ்ரீமத். த. இராமநாதபிள்ளை B A. (Lond) ௨௧எ—௨௧அ
பாஞ்சராத்திரம்:— ஸ்ரீமத். V. S. ராமஸ்வாமி சாஸ்திரியார் B A., B.L. ௨௧௯—௨௨அ
பழையவற்றிற்பழைய குறள்வெண்பாக்கள்:— சுவாமி ஞானப்பிரகாசர், நல்லூர். ௨௨௯—௨௩௪
கம்பராமாயண சாரம்:— ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார். ௨௩௫—௨௩அ
மதிப்புரை:— ௨௩௯—௨௪௨
குருகைமான்மியம்:—T. K. இராமானுஜையங்கார். 401—416

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
நாடுகளுக்கு ரூ 4—8—0.

1937.

...UGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and
...ANA IYENGAR at the Tamil Sangam Power Press,
...4, New Jail Road, Madura.

215072

உ

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| *8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| * | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| *9. | அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

---

உ

மஹாமாட்சிமைதங்கிய

## ஆறுவது ஜார்ஜு சக்கிரவர்த்தியவர்கள்

# மகுடாபிஷேக மங்களவாழ்த்து

நிலைமண்டில ஆசிரியப்பா.

மலர்தலை புலகம் மகிழ்ச்சி மீதூரப்
பலபல துறையினும் நலமெலாம் உதவ
ஓங்கிய புகழ்சேர் ஆங்கில அரசர்
குலமெனும் மலைமேல் இலகுநல் விளக்காய்
வந்தான் உலகோர் சிந்தா மணியாம்
ஆறுவதுஜார்ஜரசர்பெருமான்
இந்திய நாடும் ஏனைய நாடும்
சொந்த நாடுபோல் துலங்கப் புரக்கத்
தன்றுணைத் தேவியும் தானும் சிறக்கத்
துன்றிய மணிமுடி சூடினனாகி
வென்றிசேர் அரியணை மேவிவீற் றிருந்தனன்
நன்றிந் நாள்போல் என்றும் மற்றிவன்
வெற்றியும் திருவும் மேன்மேல் ஓங்கச்
சுற்றமும் துணையும் சூழ்ந்தனர் துதிக்க
மாதம் மூன்று மழைவளம் சுரக்க
மேதினி முழுதும் நீதி நெறிசெல
மந்திரக் கிழவர் மதிவழி யொழுகி
ஐந்தரு நீழல் அரசுவீற் றிருக்கும்
இந்திர னெனவே வாழிய இனிதே.

நேரிசை வெண்பா.

திருமால் இவனெனவே தேயமெலாம் காக்க
வரும்ஆறும் ஜார்ஜு மகிபர்—பெருமா
நிலமுழுதும் கொண்டாட நீடூழி வாழி
தலமிசைநல் வாழ்வு தழைத்து.

12—5—37. மதுரைத்தமிழ்ச்சங்கத்தார்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

31 MAY 1937

தொகுதி-௩௪.] ஈசுவர௵ வைகாசிமீ [பகுதி-௭.

Vol. 34. May—June 1937. No. 7.

27-3-37ல் சென்னையில் நிகழ்ந்த

பாரதீய ஸாஹித்ய பரிஷத்தின் முதல்வருஷ மகாநாட்டில்

வரவேற்புக்கழகத்தலைவர் மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் நிகழ்த்திய

## வரவேற்புப் பிரசங்கம்.

அன்பார்ந்த பெண்மணிகளே! கனவான்களே!

புண்ணியபூமியாகிய பாரதவர்ஷத்திலுள்ள பல வேறு நாடுகளினின்றும் இலக்கிய ஆராய்ச்சியின்பொருட்டு இங்கே வந்து கூடியிருக்கும் உங்களுடைய காட்சி என்னுடைய உள்ளத்தில் ஆனந்தத்தை உண்டாக்குகிறது. தென்னிந்தியர்சார்பாக உங்களைச் சந்தோஷத்தோடு வரவேற்கிறேன். மிகவும் சிறிதாயினும் என்மனம் விசுவரூபத்தை அடைந்து இந்தியநாடுமுழுவதையும் இப்பொழுது தழுவிக் களிக்கின்றது. எல்லா ஸபைகளிலும் அறிவுவிளக்கத்தைத் தரும் ஸபைகளே சிறப்புடையனவாகும். அறிவின் பெருக்கத்தையும் இலக்கிய ஒற்றுமையையும் குறித்து நாம் கூடியிருக்கின்றோமென்று எண்ணும்பொழுது என்னுடையஞாபகம் பழையகாலத்துக்காட்சிகளிற் போய்ப் பதிகின்றது. தமிழரசர்களுடைய இராஜதானிகளிலும் வடநாட்டு

*

நகரங்களாகிய உஜ்ஜயினி முதலிய இடங்களிலும் பலபாஷைகளைப் பேசும் அறிஞர்கள் தமக்குள் மனங்கலந்து பழகிய செய்திகள் என் அகக்கண்முன் தோன்றுகின்றன; இக்கழகத்தினால் உண்டாகும் அரிய பயனை நினைந்து இன்பசாகரத்தில் உள்ளம் ஆழ்ந்துவிடுகிறது.

இந்த ஸாஹித்யபரிஷத் அறிவொளியைத்தரும் மலைமேல் விளக்காகத் திகழ்கின்றது. இந்த விளக்கை ஏற்றிவைத்த பெரியார் இன்று தலைவராகவீற்றிருத்தல் இதன் விசேஷவளர்ச்சிக்கு நல்ல அறிகுறியாகத் தோன்றுகிறது. உலகத்துப் பேரறிஞர்களால் புகழ்ப்பெற்றவரும் "தமக்கெனவாழாப் பிறர்க்குரியாளரும்" ஆகிய மகாத்மா காந்தியடிகளின் அன்பினால் உண்டான இந்த மகாஸபையில் நானும் கலந்துகொள்ளும்படிநேர்ந்த இந்த நாளை என் வாழ்க்கையிற் சிறந்த நாளாக எண்ணுகிறேன்.

திராவிடபாஷாசமூகத்தின் தாயிடமாக விளங்கும் இச் சென்னையில் நடைபெறும் இந்தப் பரிஷத்தில் உங்களை வரவேற்கும் தகுதிவாய்ந்த பெரியோர்கள் பலர் இருக்கின்றார்கள். திராவிட பாஷைகளுள் பழமையான தமிழில் பலவருஷங்களாக ஈடுபட்டுக் கறையானோடும்ராமபாணப்பூச்சிகளோடும்போராடி ஏட்டுச் சுவடிகளின் புழுதியால் மயங்கிய கண்களோடு முதுமைப்பருவமும் துன்புறுத்த உங்கள்முன் வந்துநிற்கும் என்பால் உள்ள குறைபாடுகள் பல. ஆனாலும் முதியவனென்ற ஞாபகத்தினால் இந்த நாட்டினர் உங்களை வரவேற்கும்பொருட்டுத் தங்களுடைய பிரதிநிதியாக என்னை முன்னே நிறுத்தியிருக்கிறார்கள். உங்கள் வரவு நல்வரவாகுக!

எனக்குத் தமிழையன்றி வேறு பாஷைகளிற் பயிற்சியில்லை; ஆதலால் தமிழ்நூல்களால் அறிந்த சிலவிஷயங்களைமட்டும் உங்களுக்கு இப்போது தெரிவிக்கிறேன்.

தமிழ்நாட்டில் எந்தக்காலத்திலும் வித்வான்களுக்கே தலைமை இருந்துவந்தது. அவர்கள் அறிவைப் பரப்புவதற்குச் செய்துவந்த தொண்டுகள் சிறந்தனவாக யாவராலும் கருதப்



பட்டன. அரசர்கள் புலவர்களுக்கு உயர்ந்த மதிப்பை அளித்தனர். அவர்களுடைய அறிவுரையைப் பொன்னேபோற் போற்றிவந்தனர். சில சமயங்களில் புலவர்கள் அரசர்களுடைய குற்றங்களையெடுத்துக்காட்டிக் கண்டித்ததும் உண்டு. சில புலவர்கள் மந்திரிகளாகவும் வேறு பல சிறந்த உத்தியோகத்தினர்களாகவும் இருந்து அரசாங்கம் நல்வழியில் நடைபெறுவதற்குக் காரணமாக விளங்கினர்.

புலவர்களிடத்தே காணப்பட்ட ஒற்றுமை வியக்கத்தக்கதாக இருந்தது; "புலவர்களோடுசேர்ந்து பழகும் இன்பத்தைக் காட்டிலும் தேவலோக இன்பம் சிறந்ததாக இருக்குமாயின் ஒருமுறை பார்த்துவரலாம்" என்று பல நூற்றாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட நாலடியாரிலுள்ள ஒரு செய்யுள் சொல்லுகிறது. சுவர்க்க இன்பத்தைவிட அறிவுடையோர்கள் ஒருவரோடு ஒருவர் பழகும் இன்பமே சிறந்ததாக அவர்கள் கருதியிருந்தார்கள்.

பழையகாலப் புலவர்களிடத்தில் பகைமையென்பது மருந்துக்கும் இல்லை; "எங்களுக்கு எல்லாத்தேசங்களும் எங்கள் தேசமே; எல்லாம் எங்கள் ஊரே; யாவரும் எங்கள் சுற்றத்தாரே; பகைவர் யாரும் இல்லை" என்று புறநானூற்றில் ஒரு புலவர் சொல்லியிருக்கிறார். ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டிய அரசர்களிடத்தில் வித்துவான்கள் சென்று மகிழ்வித்துப் பரிசுகளைப் பெற்றுவந்தனர்; பின்னும் பகையரசர்களைச் சமாதானப்படுத்தி ஒற்றுமைபாக வாழச்செய்தார்கள். ஒற்றுமையும் சமரஸபாவமும் வித்துவான்களுடைய சிறந்த இயல்புகள். அவர்களுக்கு எல்லோருடைய வீடுகளும் திறந்திருந்தன.

தமிழ்நாடுமுழுவதும் சென்று பழகியதோடு பிறநாடுகளுக்கும் அவர்கள் சென்று அங்கங்கேயுள்ள அறிஞர்களுடைய பழக்கத்தைப் பெற்றனர். அப்படியே பிறநாட்டிலுள்ள வித்துவான்களும் தமிழ்நாட்டிற்குவந்து பழகிப் பாராட்டப்பெற்றுச் சென்றார்கள்.

சிலப்பதிகாரமென்னும் பழைய தமிழ்நூல், இற்றைக்குச் சற்றேறக்குறையப் பதினேழுநூற்றாண்டுகளுக்குமுன் இயற்றப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்தில் பலபாஷைகளைப்பேசும் பலநாட்டுமனிதர்கள் மனங்கலந்து இனிதுவாழ்ந்துவந்தனரென்று அது தெரிவிக்கின்றது. மதுரை முதலிய நகரங்களிலும் அப்படியே இருந்தார்கள். அவர்கள் தங்கள் தங்கள் பாஷைகளின் நயங்களை ஒருவர்க்கொருவர் சொல்லி இன்புற்றனரென்பது சொல்லாமலே விளங்கும்.

இப்பொழுது கிடைக்கும் தமிழ்நூல்களில் மிகப் பழையதும் பல ஆயிரவருஷங்களுக்குமுன் இயற்றப்பெற்றதுமாகிய தொல்காப்பியத்தில், கல்யாணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தும் தலைவன் படிப்பதற்காக வேற்றுநாட்டிற்குப் போவதைப்பற்றிய விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற நாட்டாரோடு வியாபாரம் செய்தவர்கள் புறத்தேயுள்ள அவ்வந்நாட்டுப் பாஷைகளில் வல்லுநராக இருந்தார்களென்பதை மணிமேகலை முதலிய நூல்கள் சொல்லுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்திருந்த வியாபாரி ஒருவன் நாகசாதியினர் வாழும் தீவிற் சிக்கிக்கொண்டான். அச் சாதியினர் நரமாமிசபக்ஷணிகள். அவர்கள் அவனைக் கொல்ல வந்தபோது அவன் அவர்களுடைய பாஷையை அறிந்தவனாதலின் அதிலேயே பேசினான். உடனே அவர்கள் மகிழ்ந்து தம் தலைவனிடம் கொண்டுசென்று பல பரிசுகளை அளித்து அனுப்பினார்கள். இது மணிமேகலையிற் கண்ட வரலாறு.

கூர்ஜரம், வங்கம், நேபாளம், இலங்கை முதலிய இடங்களிலுள்ள சிற்பிகளும் தொழிலாளிகளும் தமிழ்நாட்டு வேலைக்காரரோடு கலந்து உழைத்துக் கட்டிடங்களை அழகுபடுத்தினர்; தங்கள் கலைத்திறனைப் பலவகையில் அமைத்து விளக்கினர்.

முற்காலத்தில் இந்தியபாஷைகளில் முக்கியமானவை பதினெட்டு என்றதொரு கொள்கை இருந்தது. அப்பதினெட்டுப் பாஷைகளிலும் வல்லவர்கள் தமிழ்நாட்டில் அங்கங்கே இருந்தார்கள்; மகளிரும் வேறுபாஷைகளில் அறிவுவாய்ந்தவராக இருந்தனர்.



தமிழ்நூல்களை ஆராய்ந்தால், வடநாட்டினரைத் தமிழர் ஆரியரென்று குறித்துவந்ததாகத் தெரிகின்றது. சிலர் கருதுவதுபோல ஆரியரென்பது ஒரு சாதியினரையோ, ஒரு குலத்தினரையோ குறிப்பதாகத் தோற்றவில்லை. வடநாட்டுக்கூத்தரை ஆரியக்கூத்தரென்றும், வடநாட்டு அரசர்களை ஆரிய அரசர்களென்றும், பலசாதியினரும் கலந்த வடநாட்டுப்படையை ஆரியப்படை யென்றும் கூறும் தமிழ்நூல்வழக்கங்களால் இது விளங்கும்.

வடநாட்டு அரசர்களுள் ஒருவனாகிய ஆரிய அரசன் பிரகத்தனென்பவன் தென்னாட்டுப் புலவர்பெருமானாகிய கபிலரிடம் தமிழ் கற்றான். தமிழின் நயங்களை அவனுக்குப் புலப்படுத்துவதற்காக அவர் ‘குறிஞ்சிப்பாட்டு’ என்ற ஒரு நூலை இயற்றினார். அது தமிழுக்குச் சிறப்பாக அமைந்துள்ள தெய்விகக் காதலைப் பற்றிச் சொல்வது. பல அரிய மலர்களின் பெயர்கள் அதில் வந்துள்ளன; அதைக் கேட்ட அரசன், “தமிழர் எத்தகைய உயர்ந்த லக்ஷ்யங்களை உடையவர்கள்! அவர்கள் இயற்கையை எவ்வளவு நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்! எத்தனை மலர்கள்! எத்தனை மரங்கள்! ” என்று ஆச்சரியப்பட்டிருப்பானென்பதில் ஐயமில்லை.

மற்றோர் ஆரிய அரசனாகிய பிரமதத்தனென்பவன் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் ஒரு புலவனாக இருந்து தமிழ்ச்செய்யுட்களை இயற்றியிருக்கின்றான். அவன் இந்நாட்டு இலக்கியங்களைப் பயின்றதையன்றி இந்நாட்டுக்கே உரிய இசையையும் பயின்று தமிழ்நாட்டு இசைக்கருவியாகிய யாழில் வல்லவனானான். இதனால் அவன் ஆரிய வரசன் யாழ்ப்பிரமதத்தன் என்று வழங்கப்பட்டான்.

தமிழரசர்களுடைய நியாயசபையில் வடதேசத்து அறிஞர்கள் இருந்தனர். அங்ஙனமிருந்த கோசரென்ற ஒருவகையார் வடநாட்டில் இருந்த சத்யபுத்ரர்களைச் சேர்ந்தவர்களென்று சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இதுகாறும் கூறிய விஷயங்களால் பண்டைக்காலத்தில் இந்தியபாஷைகளைக் கற்ற வித்துவான்களுள்ளும் மற்றவர்களுள்ளும் ஒற்றுமையிருந்ததென்பதும் தமிழர் பிறபாஷைகளைக் கற்றதன்றிப் பிறநாட்டினருக்குத் தமிழைக் கற்பித்தும்வந்தனரென்பதும் புலனாகும்.

பிற்காலத்தில், இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்குமுன் இருந்த கம்பர் தெலுங்குநாட்டிற்குச் சென்று தம்முடைய தமிழறிவை வெளிப்படுத்திப் பிரதாபருத்திரனென்ற அரசனால் சம்மானம் பெற்றார். முந்நூறு வருஷங்களுக்கு முன் இருந்த குமரகுருபரமுனிவரென்பவர் ஹிந்துஸ்தானிபாஷையை நன்றாகக்கற்று டில்லி பாதுஷாவினிடம் ஸம்மானங்கள் பெற்றுக் காசியில் மடங்கட்டிக்கொண்டு வாழ்ந்தார். அங்கே அவர் கம்பராமாயணப்பிரசங்கம் செய்வதுண்டென்றும், அக்காலத்தில் அம்முனிவரோடு பழகிய ஸ்ரீதுளஸீதாஸர் தம்முடைய இராமாயணத்தில் கம்பர்கருத்துக்களை அமைத்திருக்கின்றனரென்றும் சிலர் கூறுவர். அருணகிரிநாதர் முதலியோரும் அங்ஙனமே வடநாட்டினராற் போற்றப்பட்டனரென்பதற்குரிய குறிப்புக்கள் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டுச் சங்கீதவித்துவான்கள், மகாராஷ்டிரம், ஹிந்துஸ்தானி, தெலுங்கு முதலிய பாஷைகளையும் அறிந்து உபயோகப்படுத்தினர். அந்த அந்த நாட்டிற்குச் சென்று புகழ் பெற்றனர். இவை பழையவரலாறுகள்.

இப்பொழுது, அரசியல்சம்பந்தமான விஷயங்களாலும் சாதிசமய வேறுபாட்டுணர்ச்சியாலும் பாஷை விஷயத்திலும் வேறுபாடான சில கொள்கைகள் உண்டாயிருக்கின்றன. ஆயினும், தமிழன்பர்களுடைய முயற்சிகளால் புதுவகையில் தமிழ்நூல்கள் இயற்றப்பட்டுவருகின்றன; கலை, கதை, ஆராய்ச்சி முதலிய விஷயங்களில் உபயோகமுள்ள அபிவிருத்தி ஏற்பட்டுவருகின்றது.



இந்தப் பாரதீயஸாஹித்யபரிஷத்தின் நோக்கம் எவ்வளவு உயர்ந்தது! இதன் முயற்சிகளால், குறுகிய நோக்கங்களும் சிறு வேறுபாடுகளும் ஒழிந்து தமிழர்களுள் ஒற்றுமை, திராவிட பாஷாஸமூகத்தாருள் ஒற்றுமை, பாரதீய பாஷாஸமூகத்தாருள் ஒற்றுமையாகிய மூன்றும் ஒன்றன்பின் ஒன்றாக உண்டாகுமென்றே நம்புகிறேன்.

இந்தப் பரிஷத்தின் முக்கியநோக்கங்களுள் ஒன்று, ஒரு பாஷையிலுள்ள அரிய விஷயங்களை எல்லாப்பாஷைகளுக்கும் பொதுவாக்கிக்கொள்ளுதலாகும். இதற்கு நம்முடைய பொதுப் பாஷையாக ஹிந்தியை ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். இந்தியாவிலுள்ள பல பாஷைகளிலும் இது பொதுவாக இந்தியாவிற்கே உரியதென்பதை இதன் பெயரமைதியே குறிக்கின்றது. பழைய காலத்தில் ஸம்ஸ்கிருதம் இந்தியாவின் பொதுமொழியாக இருந்ததென்று சில பழையநூல்களால் தெரியவருகின்றது.

சிலகாலமாகத் தமிழ்நாட்டு இலக்கியப்பகுதிகளிற் சில 'ஹம்ஸ்' முதலிய பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. தமிழின் விரிந்த நூற்பரப்பைப் பார்த்தால் அது பல அரிய விஷயங்களை உலகத்திற்கே உதவும் பெருமைவாய்ந்ததென்பதை அறியலாம்.

இப்பொழுது இந்திய நாட்டில் வழங்கும் பாஷைகளுள் வடமொழியை யல்லாமல் இலக்கியவளம்படைத்தவற்றுள் மிகப் பழமையானது தமிழ். இதன் இலக்கணத்தை நாட்டும் தொல்காப்பியம் இன்னகாலத்ததென்று வரையறுக்கப்படாத நிலையில் உள்ளது; மூவாயிரவருஷங்களுக்குமேற்பட்ட பழமையுடையதென்பதில் தடையொன்றும் இல்லை.

சங்கநூல்களென்று சொல்லப்படும் நூல்கள் 2000 வருஷங்களுக்குமுன் இயற்றப்பட்டவை. அவற்றுள் அழிந்தனபோக இப்பொழுது கிடைக்கும் நூல்கள் பத்துப்பாட்டு, எட்டுத்

தொகை, பதினெண்கீழ்க்கணக்கென்று மூன்றுபிரிவாக வகுக்கப்பட்டுள்ளன. தமிழுக்கே சிறப்பாக அமைந்த இசைநூல்களும் நாடகநூல்களும் பிறகலைகளைப்பற்றியநூல்களும் அழிந்தன. பெருங் கடலைப்போலப் பரந்திருந்த அக் கலைகளிற் சில துளிகளே இப்பொழுது கிடைக்கின்றன.

இலக்கியத்திலும் பல நூல்கள் இறந்துவிட்டனவாயினும் முற்கூறிய முப்பத்தாறுநூல்கள் இப்பொழுது புத்தக உருவத்தில் வெளிவந்துள்ளன.

தமிழ்மொழியில் மற்றப் பாஷைகளில் வரையறுத்துச் சொல்லப்படாத பொருளிலக்கண மென்ற பகுதியொன்று சிறப்பாக இருக்கிறது. அகப்பொருள் புறப்பொருள் என்று இரண்டு வகைப்படுவது அது. அகப்பொருள் காதல்வாழ்வைப்பற்றியது; புறப்பொருள் பலவகையாக அமைந்தாலும் பெரும்பகுதி வீரவாழ்வைப்பற்றியது. இலக்கியத்துக்கு உயிரை ஊட்டும் காதலும் வீரமுமே தமிழர் பொருளிலக்கணத்தால் வரம்புசெய்யப்பட்டிருக்கின்றன. சங்கநூல்களில் இவ்விரண்டுவகையிலும் உள்ள செய்யுட்கள் பல.

பண்டைத் தமிழ்நூல்களில் இயற்கையழகின்வருணனை அதிகம். ஸ்வபாவோக்தியாகிய தன்மைநவிற்சியணியே எங்கும் காணப்படும்; அதிசயோக்தி பெரும்பாலும் இல்லையென்றே சொல்லவேண்டும்.

அக்காலத்துப் புலவர்களின் கவிதை இயற்கைத்தாயின் மடியில் தவழ்ந்து, தெய்விகக் காதலிலும் அறங்திறம்பா வீரத்திலும் விளையாடி, சமரஸநிலையில் வீற்றிருக்கின்றது. கவிஞர்களுடைய சிருஷ்டிகளில் அருவிகள் இடையறாத சங்கீதத்தோடு வீழ்வதும், அதில் மகளிர் துளைந்து விளையாடி, இன்புற்று மலர்களைப்பறித்துப் பாறையிலே குவித்து அழகுபார்ப்பதும், நாயகன்



ஒருவன் வேட்டையாடிக்கொண்டு வருவதும், அவன் அம்மகளிர் கூட்டத்திலுள்ள நாயகி யொருத்தியைக் காண்பதும், இருவர் கண்களாகிய மடைவழியாகப் பாய்ந்த அன்புவெள்ளத்தில் இருவருள்ளமும் கலந்து கரைவதுமாகிய நிகழ்ச்சிகளைப் பார்க்கிறோம். ஏழை இடையன்வீட்டிற் பந்தற்காலிற் கட்டியிருக்கும் தழையை ஆட்டுக்குட்டி உண்பதும், கடற்கரையிலுள்ள வலையர்தெருக்களில் முத்துக்களைக் கிளிஞ்சிலுக்குள் இட்டுக் குரங்குகள் குழந்தைகளோடு கிலுகிலுப்பை விளையாடுவதும், இடையன் மாலைக்காலத்தில் தன்னுடைய புல்லாங்குழற்கீதத்தினால் பசுக்களையெல்லாம் ஒன்றுகூட்டி வீட்டுக்குவருகையில் வழியிலே மலர்ந்துள்ள முல்லைப் பூக்களைக் கொத்தோடு பறித்துத் தலையிற் செருகிக் களிப்பதுமாகிய காட்சிகளைக் காண்கிறோம். அரசர்கள் வித்வான்களோடு கூடிப் பொழுதுபோக்குவதும், காலவரையறைப்படி அரசியற் காரியங்களைச் செய்வதும், குடிகளுடைய வழக்கை நடுநிலைமை பிறழாது தீர்ப்பதும், விழாக்கொண்டாடுவதுமாகிய காட்சிகளையும் காண்கிறோம்.

நெடுநாட்களாகத் தீமூட்டப்படாமையால் காளான்முளைத்த அடுப்பும் ஓட்டைக்கூரையும் உள்ள வறுமைநிலையம் ஒருபக்கம் சித்திரிக்கப்படுகின்றது; பல பண்டங்களை விற்கும் இடங்களில், பகலிற் கொடிகளாலும் இரவில் விளக்குக்களாலும் பாஷையறியாதவர்களும் அறிந்துகொள்ளும்படி இன்ன இன்ன பண்டங்கள் விற்கப்படுமென்பதைக் குறிப்பிக்கும் கடைவீதிகளிலும், அரண்மனைகளிலும் திருமகள் நடனம்புரியும் கோலம் ஒருபுறம் சித்தரிக்கப்படுகின்றது.

வீரம், காதல், கருணை, சோகம் முதலிய ரஸபாவங்கள் அங்கங்கே அமைந்துவிளங்குகின்றன. இவற்றிலெல்லாம் தமிழர் காட்டிய நடையை மற்றவர்களும் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமன்றோ?

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின்"

[துன்பத்தைப் பொறுத்து விரதமிருப்பவர்கள் ஆற்றுவது பசியை; அவர்கள் செய்யும் தவம் அப்பசியை அன்னதானத்தால் மாற்றுபவர்களுடைய தவத்திற்குப் பிற்பட்டதேயாகும்]

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

[மரணத்தைக்காட்டிலும் துன்பந்தருவது வேறொன்றில்லை; ஆயினும் கொடுக்கமுடியாதபோது அம்மரணமும் இனிதாகும்]

என்பவைபோன்ற பல நீதிகள் அடங்கிய திருக்குறளும்,

"...நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனி நாகரிகர்"

[தம்முடைய உண்மையன்பர்கள் கொடுப்பாராயின் நஞ்சினையும் நாகரிகர் உண்பார்கள்]

"செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும்
நெஞ்சோர்ந் தோடா நிலைமை"

[உடம்பின்மேல் சந்தனத்தை எறிந்தாலும் உடம்பைச் செதுக்கினாலும் பிளந்தாலும் மனத்தில் வேறுபாடுண்டாகாத சமநிலை]

"செய்தி கொன்றோர்க் குய்தியில்"

[நன்றிமறந்தவர்களுக்குப் பிராயச்சித்தமே இல்லை]

என்பனபோன்ற நீதிகளைச் சொல்லும் வேறு பல நூல்களும் அடங்கிய தமிழருடைய பொக்கிஷத்தை யாவரும் வாரிக்கொண்டு பயன்படுத்தவேண்டாமா?

பகைவனுக்குப் பயந்து காட்டிலிருந்தபோது தன்பால் பரிசு பெற வந்த புலவனுக்குத் தன் கைவாளை நீட்டித் தன் தலையை



அரிந்துசென்று பகைவனிடம் கொடுத்துப் பொருள்பெறும்படி சொன்ன குமணவள்ளலது வள்ளன்மையையும், தம்முடைய நண்பராகிய புலவர் இன்னநாளில் வருவாரென்றுகூறித் தான் உயிர்நீங்கும்பொழுது அவருக்கும் இடமொழிக்கச்செய்த கோப்பெருஞ்சோழனென்னும் அரசனுடைய நட்புணர்ச்சியையும், பசுவின் கன்று இறத்தற்குக் காரணமாகிய குற்றத்தை அறியாமற் செய்த தன் மகனைத் தேர்க்காலின்கீழ் இட்டுக் கொல்லத்துணிந்த சோழனது நீதிநிலைமையையும், தம்மைக் குத்திய பகைவனுக்குத் தீங்குநேராவண்ணம்செய்து பின் உயிர்விட்ட மெய்ப்பொருள் நாயனாருடைய மனவலியையும் மற்றப்பாஷைகளைப் பேசுவோர் படித்து அறிந்து பாராட்டினால் அப்பொழுதாவது தமிழருக்கு ஓர் ஊக்கம் உண்டாகாதா?

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய காவியரத்னங்களை இந்தியர் யாவரும் ஆராய்ந்து ஆனந்தமடையும் நாள் வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

தமிழர் நிலங்களைப் பகுத்த பகுப்பும், காவியநிலை வரையறுக்கும் இலக்கணங்களும் மற்றப் பாஷைகளுக்குப் புதியவை. தமிழ்நாட்டார் நிலத்தை ஐந்துபகுதிகளாகப் பிரித்தார்கள். மலையும் மலையைச்சார்ந்த இடமும் குறிஞ்சி; காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை; வேனிலால் நீரற்றுப்போன மலையும் காடும் சேர்ந்த இடம் பாலை; வயலும் வயலைச்சார்ந்த இடமும் மருதம்; கடலும் கடலைச்சார்ந்த இடமும் நெய்தல். இவ்வைந்து நிலங்களுக்கும் தனித்தனியே தெய்வம், மக்கள், விலங்கு, பறவை, மரம், மலர், நீர்நிலை, தொழில் முதலிய வரையறைகள் உண்டு. பூமிசாஸ்திரம், தாவரசாஸ்திரம், பிராணிசாஸ்திரம், மனோதத்துவம் முதலிய பல சாஸ்திரங்களால் அறியப்படும் உண்மைகளுக்கு இவை பொருத்தமாக இருக்கின்றன. சென்னை ஹைகோர்ட்டில்

நீதிபதியாக இருந்து விளங்கிய டாக்டர் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் மதுரை நகரஸபைத்தலைவராக இருந்தகாலத்தில் அந்நகரைச்சார்ந்த சில இடங்களில் சில மரங்களை வைத்து வளர்க்கச்செய்தனர். முதலில் வைத்த மரங்கள் பட்டுப்போயின. தமிழ்நூல்களை யறிந்தவராதலின் அப்பெரியார், அப்பொழுது தமிழ் அகப்பொருள்நூல்களைப் படிக்கச்செய்து அந்த அந்த இடத்திற்கேற்ற மரங்கள் இன்னவை என்பதையறிந்து அவற்றை வைக்கச்செய்தகாலத்தில் அவை நன்றாக வளர்ந்தனவாம். இச்செய்தியை அவர்களே என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். இதனால் தமிழ் இலக்கியத்திலுள்ளசெய்திகள் இயற்கையோடுபொருந்தியிருத்தலை அறியலாம்.

நாட்டை ஆளும் முறை, நகரத்தின் அமைப்பு, பாதுகாப்பு, ஒழுக்கங்கள், தெய்வவழிபாடு முதலியவைகளைப்பற்றித் தமிழ் நூல்களில் உள்ள செய்திகளைப் பார்த்தால் தமிழர் நாகரிக வாழ்வின் நிலை நினைக்குந்தோறும் வியப்பை உண்டாக்குகிறது. அரசன் குடிகளோடு கலந்து நாட்டுநன்மைகளைச் செய்வதும், அறிஞர்களுடைய ஸபையைக்கூட்டி நன்றாக ஆராய்ந்து காரியங்களைச் செய்வதும் ஆகிய செயல்கள் தமிழர் அரசாட்சியைச் சிறந்தநிலையில் வைத்தன. குடிகளுக்கு எந்தவகையிலும் துன்பமில்லாத அரசியல் ஏற்பட்டிருந்தமையால் தமிழர்வாழ்வு இன்பவாழ்வாக இருந்தது; அதனால் அரசனைத் தெய்வமாகக் கருதிவந்தனர். வைஷ்ணவபக்தர்களுள் ஒருவராகிய நம்மாழ்வார், "அரசனைக் கண்டால் திருமாலைக் கண்டவன்போலாகின்றேன்" என்று ஒரு தலைவிசொல்வதாக அமைக்கின்றார். அங்கங்கே நகரங்களிலும் ஊர்களிலும் இருந்த அதிகாரிகள் உலகமே பிறழ்ந்தாலும் தம் கடமையைக் குறைவின்றி நிறைவேற்றிவந்தனர். அரசன் குடிகளின் சேவகனாக வாழ்ந்தான்; புலவர்களுக்குள் ஒரு புலவனாகவும், வீரர்களுக்குள் ஒரு வீரனாகவும், ரஸிகர்களுக்குள் ஒரு ரஸிகனாகவும், ஏழை ஜனங்களுக்குள் ஓர் ஏழைமனிதனாகவும் இருந்து குடிகளுக்கு உயிரைப்போல் விளங்கினான். இத்தகைய அரசியலைப் பற்றித் தமிழ்நூல்களிற்காணும் அரியசெய்திகள் நம்மை ஒரு கனவுலகத்திற்கு இழுத்துச்செல்லுகின்றன.



தமிழ்வைத்தியநூல்கள் அருமையான விஷயங்களடங்கியவை. சித்த வைத்திய நூல்களென்று அவை வழங்கப்படும். சிற்பம் முதலிய கலைகளின் திறத்தில் தமிழ்நூல்களின் உதவியால் பலவிஷயங்களை அறிந்துகொள்ளலாம். பிற்காலத்தில் ஸ்தல சம்பந்தமான இலக்கியங்களும் பிரபந்தங்களும் ஆயிரக்கணக்காகத் தமிழில் உண்டாகியிருக்கின்றன.

பழையதமிழ்நூல்களிலுள்ள அரிய சரித்திரவிஷயங்களிற் பல இன்னும் விளங்காமல் இருக்கின்றன. பரந்துவளர்ந்த இந்திய நாகரிகம் ஒன்றுபட்டுநின்றகாலத்தில் இயற்றப்பட்ட அந் நூல்களைப் பரந்த அறிவோடு பார்க்கும்போது பல உண்மைகள் வெளியாகலாம். ஜாவா, கம்போடியா, ஸையாம் முதலிய இடங்களிலுள்ள சிற்பங்களாலும் அங்கே வழங்கும் வரலாறுகளாலும் இதுகாறும் விளங்காத தமிழ்நூற்செய்திகள் விளங்குகின்றன. இந்திய பாஷாபண்டிதர்களுள் ஒற்றுமை உண்டாகுமாயின் அவர்கள் இந் நூல்களைப் படித்தோ மொழிபெயர்க்கச்செய்தோ அறிந்துகொண்டு ஆராய்ந்து பலவிஷயங்களை விளங்கச்செய்யலாம். இனி, நாம் இயற்றப்புகும் இலக்கியங்களில் இந்த ஒற்றுமையைப் பயன்படுத்திக்கொள்ளுவது நலமாகும்.

பிற்காலத்துநூல்களில் வரவர உயர்வுநவிற்சியும் ஸ்வபாவ விரோதமாகிய வருணனைகளும், அளவுக்குமேற்பட்ட சிருங்காரமும், விரோதவுணர்ச்சியை உண்டாக்கும் மதவிஷயங்களும் புகுந்து ஒற்றுமைக்குப் பங்கம்விளைவித்தன. அவற்றை இனி நூல்செய்யப்புகுவார் நீக்கவேண்டும். பழையநூல்களில்

இருந்தால் அவற்றை இலக்கிய இன்பத்துக்காகப் பாதுகாத்துக் கற்றல்வேண்டும்.

புது இலக்கியங்கள் இயற்றுவதற்கு எவ்வளவோ துறைகள் இருக்கின்றன. பல பாஷைகளிலுள்ள விஷயங்களை அறிவதனால் இத் துறைகள் இன்னும் விரிவடையும். நாளடைவில் மனிதர்களுடைய வாழ்க்கைநிலை மாறுபடுகின்றது; அதற்கேற்பக் கொள்கைகளும் மாறுபடுகின்றன; அக்கொள்கைகளுக்கு ஏற்றபடி இலக்கியங்களும் நல்வழியில் மாறவேண்டியது இயல்பேயாகும்.

தங்கள் தங்கள் நாட்டினரின் உள்ளத்தை வசீகரிக்கும் இலக்கிய ஆசிரியர்களாகிய நீங்கள் இங்கே கூடியிருக்கிறீர்கள். உங்களுடைய பேரறிவின் துணையினால் பொதுவாகத் தென்னாட்டாரும் சிறப்பாகத் தமிழ்நாட்டாரும் அறியவேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன. உங்களுடைய தேசபாஷைகளாகிய ஆறுகள் ஞானமாகிய சாகரத்தில் ஒன்றுசேர்ந்து விளங்குகின்றன. இந்தப் பாரதீயஸாஹித்யபரிஷத்தின்மூலமாக உங்களுடைய ஞானச் செல்வம் இந்நாட்டினர்க்குப் பயன்பட்டு நம்மிடையே பரந்த பாஷாபிமானத்தையும் அன்பையும் விருத்திசெய்வதாகுக! இறைவன் நமக்குத் தோன்றாத்துணையாக இருந்து நல்லருள் பாலிப்பானாக!

---

# யவனர்வரலாறு.

[யாழ்ப்பாணம் ஸ்ரீமான். த. இராமநாதபிள்ளை, B.A., (Lond.) அவர்கள்.]

௧௬௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.

## எதீனியர்.

கோமர் தம் இதிகாசத்தில் எதீனியரைப்பற்றி ஒன்றும் குறிக்கவில்லை. ஏதென்ஸ்நகரத்தையாண்ட தீசியஸ் என்னும் ஒரு வேந்தன் அயல்நாட்டாரை வென்று புகழ்பெற்றிருந்தான். ஏதென்ஸ்நகர்க் கோட்டை கடற்கரையிலிருந்து நாலுமைல்தூரத்திலுளது. அக நகரிலும் புறநகரிலும் வாழ்ந்த மக்கள் படைவீரர் வித்தைவல்லோர் இடையர் தொழிலாளர் என நான்குவகுப்பினர். ஒன்பதின்மர் சபையொன்று தம்முள் மூவரைத்தெரிந்து அரசியலை நடாத்திற்று. மேன்மக்களே பெரும்பாலும் உத்தியோகம்பெற்றனர். கி. மு. 632-ல் ஏழைகள் மிகவும் கஷ்டப்பட்டனர். அச்சமயத்தில் சைலன் என்பான் எளியரை அளிப்பதாகச்சொல்லிச் சனங்களைத் தன்வசப்படுத்திக் கொடுங்கோல்செலுத்த எண்ணினான். அவன் விளையாட்டுவிழாவில் முதன்மைபெற்றுத் துலங்கினான். மகாக்கிள்ஸ் என்போன் சைலனைப் பலிபீடத்தின்முன் கொன்றுவீழ்த்தினான். கொன்றோனை நாடுகடத்தலே பிராயச்சித்தமெனச் சோலன் என்னும் புத்திசாலி சொன்னான். கி. மு. 624-ல் பிரமாணங்கள் வகுக்கப்பட்டன. அக்காலத்தில் எவ்வகைக்குற்றத்திற்கும் மரணதண்டனை விதித்தல் வழக்கமாயிருந்தது. அது நிற்க; எதீனியர் மகாராநாட்டை வெல்லமுடியாதென்பதை யுணர்ந்து அப்போர்தொடர்தல் குற்றமென விதித்தனர். சோலன் விசான் போல் நடித்துப் போர்செய்யும்படி சனங்களைத் தூண்டினான். எதீனியர் தோல்வியடைந்து பின்னர் ஸ்பாட்டரின் துணைபெற்று வென்றனர். அக்காலத்தில் எதீனியர், குன்றவர் பரதவர் வேளாளர் என மூன்றுபிரிவினராகிக் கலகப்பட்டனர். குன்றவர் கடன்பட்டுத் தம் நிலங்களை யிழந்து ஏழைகளாயினர். அவர் பெண்டிர் அடிமைகளாக விலைப்பட்டனர். கி. மு. 594-ல் சோலன் கடன்கொடுக்கவேண்டியதில்லையென முரசறைவித்தான். அவ்வறிக்கையின்பின் நிலமும் பெண்ணும் பொறுப்பாகக் கடன்பெறக்கூடாதெனப் பிரமாணம் விதிக்கப்பட்டது. பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு யாதேனும் ஒரு தொழில் கற்பிக்கவேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. செல்வர் படைத்தலைவராயும் எளியர் படையாளராயும்

சேவிக்கலாம். சோலன் பல சீர்திருத்தங்களைச் செய்தபின் பத்தாண்டுகள் பிறதேசசஞ்சாரஞ் செய்தான். தன் திருத்தமுறையின் பலாபலன்களை அறிதற்குப் பத்தாண்டுகழிந்தபின் திரும்பினான். வேளாளரும் பரதவரும் கலகப்பட்டேயிருந்தனர். மேன்மகன் பேசியஸ்திருற்றஸ் என்பவன் கொடுங்கோலனாகவெண்ணுகிறான் எனச் சோலன் சனங்களுக்கு அறிவித்தனன். பேசியஸ்திருற்றஸ் தன் உடம்பில் தானே ஊறுசெய்துகொண்டு தன் பகைவர் ஊறுபடுத்தினரெனக் கதறினான். உடனே எதீனியர் அவனுக்கு ஐம்பது மெய்காப்பாளரைக் கொடுத்தனர். மகாக்கிள்ஸ் இக்கொடுங்கோலனைத் துரத்தினானென யவனசரித்திரவாசிரியரான கரடோற்றஸ் கூறுகிறார். பேசியஸ்திருற்றஸ் வீயர் என்னும் ஒரு மங்கையை ஞானதேவதையைப்போல அலங்கரித்து, அவளோடு வீதிதோறுஞ் சென்று, "நகரத்தோரே பேசியஸ்திருற்றஸ் என்னும் தலைவனை வரவழையுங்கள்" எனக் கத்தினான். அவன் சனங்களை இங்ஙனம் ஏமாற்றி, இரண்டாமுறையும் கொடுங்கோலோச்சினான். அவன்மக்கள் அவனையும் அவன்மனைவியையும் பகைக்கச் செய்தனராக அவன் மாமன் அவனைத் துரத்தினான். பத்தாண்டு கழிந்தபின் பேசியஸ்திருற்றஸ் மாதன் களத்தில் வெற்றியடைந்து கி. மு. 529 வரையும் கொடுங்கோலோச்சினான். அவனுடைய ஆட்சியில் கமத்தொழில் விருத்தியடைந்தது; கலைகள் வளர்ந்தன; கோமருடைய பாடல்கள் தொகுக்கப்பட்டன; அரசனும் சோலன் சாற்றிய அரசியன்முறையைத் தழுவினான். அவன்பின் மூன்று கொடுங்கோலர் ஆண்டனர். ஐசக் கோராஸ் என்னும் மேன்மகன் ஓர் அமைச்சனானான். அவன் சனங்களைப் பத்துக்குழுவாக வகுத்து ஒவ்வொரு குழுவையும் பத்துப்பிரிவாக்கினான். அவன், "கொடுங்கோலோச்சுவார் நாடுகடத்தப்படுவர்" என விளம்பரஞ்செய்தான். பெரும்பாலார் ஒருவனைக் கொடுங்கோலன் என எண்ணினால் அவன் நாடுவிட்டு நீங்கவேண்டும். இவ்வண்ணம், எந்தக்குடிமகனையுந் துரத்தலாம். கிளியத்தீனஸ் என்னும் கொடுங்கோலன் இவ்வாறே நாட்டினின்றுந் துரத்தப்பட்டான். இக்காலத்தில் தீபர் எதீனியரோடு பகைத்தனர். கிளியத்தீனன் பாரசியரிடம் துணைவேண்டினான். ஸ்பாட்டரின் கொடுங்கோலன் கிளியமீனன் தீபருக்குத் துணைபுரிந்தான். [தொடரும்]

ஸ்ரீ:

## மஹாகவி பாஸரால் இயற்றப்பெற்ற

# பாஞ்சராத்திரம்.

## முகவுரை.

மஹாகவியாகிய பாஸர் என்பவராலியற்றப்பெற்ற பாஞ்சராத்ரம் என்னும் இந்தக் கதையில் குறிப்பிட்டிருக்கிற ஐந்து இரவுகளிலிருந்து, இந்த ரூபகத்துக்குப் பாஞ்சராத்திரம் என்னும் பெயர் அமைந்திருக்கிறது. (பஞ்ச= ஐந்து, ராத்ரி = இரவு.)

கவறாட்டத்தில் தோல்வியடைந்தமையால், தாங்கள் இசைந்தபடி, கானகத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் சுற்றித்திரிந்து, பதின்மூன்றாம் ஆண்டு, பாண்டவர்கள் உருவமாறிக்கொண்டு 'அஞ்ஞாதவாசம்' செய்தார்கள்.

அவர்களுடைய "அஞ்ஞாதவாசம்" கழிந்தும், துரியோதனன், அவர்களுக்கு உவப்புடன் பாதிராஜ்யம் கொடுக்க உடன்படான் என்பதைத் தெரிந்து, போர்நிகழ்ந்தால் அவர்கள்குடும்பம்முழுவதும் அழிந்துவிடுமேயென அச்சமுற்றுக் குருகுலத்துக்கு ஆசாரியரான துரோணர், துரியோதனனைப் பாண்டவர்களுடன் சமாதானம்செய்வித்து அவர்களுக்கு நாட்டைக் கொடுப்பிக்கக்கருதித் தன் விருப்பத்தை அவனிடம் வெளியிடத்தக்கசமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அவருடைய தூண்டுதலால் துரியோதனன் சிறந்ததான ஒரு வேள்வியை நடத்தினான்; யாகம் முடிந்து நீராட்டம் (அவபிருதஸ்நானம்) ஆனபிறகு, அங்கே குழுமியிருந்தவர்களின் முன்னிலையில், தனக்குத் தர்மத்திலும் ஆயுதப் பயிற்சியிலும் ஆசானான துரோணருக்கு (யஜ்ஞதக்ஷிணையாக) அவருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதாகத் துரியோதனன் வாக்குறுதிசெய்தபொழுது, பாண்டவர்களுக்குரிய பாதிராஜ்யத்தை அவர்களிடம் கொடுத்தலே தமது விருப்பமென்றும் அவ்விதமே செய்யும்படியும் துரோணர் அவனைக் கேட்டார். அவன் மாமனான சகுனியுடன் ஆலோசித்து, ஐந்துநாட்களில் பாண்டவர்களின் இருப்பிடம் தெரிந்து கூறப்படுமானால், அவருடைய இஷ்டப்படிசெய்வதாக வாக்களித்தான். பாண்டவர்கள்

உருவமாருடிக்கொண்டிருந்ததால், அவர்கள் நிலைமையைத் துரோணர் தெரிந்து சொல்லமுடியாதென்று துரியோதனன் நினைத்திருந்தான். விராடநகரத்தில் நூறுகீசகர்களையும் மறைவாக இருந்து எவனோ கொன்றுவிட்டான் என்ற செய்தி கிடைத்தவுடன், மிகவும் வலிமைபொருந்தியவர்களான அவர்களைக் கொன்றவன் பீமனே என நிச்சயித்துப் பாண்டவர்கள் ஒருகால் அங்கே இருக்கலாம் என நினைத்த பீஷ்மர் சொற்படி துரோணர் துரியோதனன்வார்த்தைக்கு உடன்பட்டார்.

விராடராசன் துரியோதனனுடைய வேள்விக்கு அழைக்கப்பட்டும் வரவில்லையென்ற காரணத்தைமுன்னிட்டுப் பீஷ்மர் அம்மன்னனுடைய பசுநிரைகளைக் கவர்ந்துவரும்படி கௌரவர்களைத் தூண்டினர். கௌரவர்கள் விராடனுடைய நிரைகளைப் பிடிக்கும்போது பாண்டவர்களுடன் போர்நிகழ்ந்ததால், அவர்களை ஐந்து நாட்களுள் தெரிந்துகொள்ளத் துரோணருக்கு அவகாசம் கிடைத்தது. தான் இசைந்தபடி துரியோதனன் பாதிநாட்டை மனமொப்பிப் பாண்டவர்களுக்குக் கொடுத்தான்: என்பது கதையின் சுருக்கம்.

மகாபாரதக் கதையைச் சற்று மாற்றி மகாகவியான பாஸரால் இந்த ரூபகம் ஆக்கப்பெற்றிருக்கிறது.

இதற்குப் பெயர் வடமொழியில் 'ஸமவாகாரம்' எனப்படும். அதன் இலக்கணமாவது:—

யத்ர ஸர்வம் நாடகவச் ச ஸந்தயோ விமர்ஶவர்ஜிதா: ।
நேதாரோ த்வாதஶ வ்யக்தம் க்யாதாஶ்ச தேவாஸுராதய: ॥
வீரப்ராயா நாநாரஸாஸ்த்ரயோ'ங்கா ஶ்லிஷ்டவக்த்ராஶ்ச ।
வஸ்துஸ்வபாவதைவாரிக்ருதாஸ்ஸ்யு: கபடாஸ்த்ரய: ॥
ஸங்க்ராமாக்நிநகரோபரோதாதிவித்ரவாஸ்த்ரய: ।
ப்ரதமே'ங்கே த்ரிஸந்த்யா கதா யாமத்ரயாவதி: ॥
யாமத்வயவிஹிதா த்விதீயே'ங்கே த்ருதீயாங்கே'ர்தயாமிகா ।
அப்யேஷ ஸமவகார: ஸ்யாத் வீத்யங்கைஶ்ச கைஶிகீவர்ஜித: ॥



நாடகத்தைப்போல் பிரஸ்தாவனையும், விமர்சஸந்தியைத்தவிர மற்ற நான்குஸந்திகளும், வேறு வேறு விருப்பமுள்ளவர்களும், தேவாஸுரர்போன்றவர்களுமான பன்னிரண்டு கதாநாயகர்களும், அதில் காணப்பெறவேண்டும். மேலும் வீரரஸத்தையே முக்கியமாகக்கொண்டு மற்றரஸங்களையும் உடையதாயும், நீண்டதும் குறுகியதும் மிகக்குறுகியதுமான மூன்று அங்கங்களுடன் கூடினதாயும் இயற்கையாலும் தைவிகங்களாலும் நிகழ்ந்த கபடங்கள் மூன்றுள்ளதாயும், நகரமுற்றுகை தீவைத்தல் முதலானவையால் ஏற்படுகிற மூன்று துன்பங்களுடன்கூடியதாயும் கதை இருத்தல்வேண்டும். முதல் அங்கத்தின்கதை மூன்றுயாமநேரத்திலும், இரண்டாவது அங்கக்கதை ஒருயாமநேரத்திலும், மூன்ருவது அங்கக்கதை அரையாமநேரத்திலும் நிகழ்ந்ததாக இருக்கவேண்டும். "வீயி" (வீதி) என்ற ரூபகத்தைப்போல் சில விசேஷங்களும் காணப்படவேண்டும்.

இதில் வீரரஸமே பிரதானமாயினும், காவியச்சுவைகளில் மற்றவைகளும் அங்கங்கே காணப்பெறுகின்றன.

முக்கியமான கதாநாயகனை துர்யோதனன் தர்மவீரன்; துரோணர் தயாவீரர்; மற்ற நாயகர்களிடம் யுத்தவீரத்தனம் காணப்படுகிறது. உண்மையைக்காப்பாற்றுதல் என்ற தர்மத்தைத் துரியோதனன் நிலைநிறுத்தினான். தயாவீரரான துரோணர் தம்முடைய சீடர்களான பாண்டவர்களுக்கு நாடுகிடைப்பதற்காக மிகவும் முயன்று முடிவில் அவர்களுக்கு ராஜ்யம் கிடைக்கும்படி செய்தார்.

இவ்விதமாகப் 'பிரதாபருத்ரீயம்' என்ற அலங்காரக் கிரந்தத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம், இதில் இலக்கணங்கள் அமைந்திருக்கின்றனவென்பது இதைப் படிப்போர்க்கு விசதமாகும்.

பாசமஹாகவியால் இயற்றப்பெற்ற ஓரங்கமுடைய திருசியகாவியமாகிய மத்தமவியாயோகம் என்பது செந்தமிழில்

மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது. இப்பொழுது அம்மஹா கவியால் இயற்றப்பெற்றதும் மூன்று அங்கங்களையுடையதுமான பாஞ்சராத்ரம் என்ற திருசியகாவியமானது செந்தமிழ் நேயர்கள் சிலர் விரும்பியவாறு மொழிபெயர்த்து வெளியிடப்பெறுகிறது. செந்தமிழ்நேயர்கள் விரும்பினுல் மேலும் சில காவியங்களை மொழி பெயர்த்து வெளியிட முயல்வேன்.

இங்ஙனம்,

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி.

---

## கதா பாத்திரங்கள்.

| | |
|---|---|
| அபிமன்யு | அர்ஜுனன்புதல்வன். |
| அர்ஜுனன் | பாண்டவரைவருள் மூன்றாமவன். |
| உத்தரன் | விராடவரசன்புத்திரன். |
| கர்ணன் | அங்கதேயத்தரசன்; துரியோதனன்தோழன். |
| கோமித்திரகன் | ஓர் இடையன். |
| துர்யோதனன் | ஹஸ்தினபுரி அரசன். |
| துரோணர் | துரியோதனன் முதலியவர்களுக்கு ஆசிரியர். |
| பிருகந்நளை | அந்தப்பெயருடன்கூடின பாண்டவனை அர்ஜுனன். |
| பகவான் | பிராமணவேஷந்தரித்தவரான யுதிஷ்டிரர். |
| பீமசேனன் | பாண்டவரைவருள் இரண்டாமவன். |
| பீஷ்மர் | துரியோதனன்முதலானவர்களுக்குப் பாட்டனார். |
| விராடன் | மத்ஸ்யதேயத்ததிபன். |
| இடைப்பெரியோன் | இடைச்சேரிக்கு நாயகன். |
| சகுனி | துரியோதனன் மாமன். |

கஞ்சுகி, ஏவலாளர், அந்தணர், தேர்ப்பாகர் முதலியோர்.

---

ஸ்ரீ:

### மகாகவி பாஸரால் இயற்றப்பெற்ற

# பாஞ்சராத்திரம்.

—(0)—

ஸூத்ரதாரன்:—(நாந்தியினிறுதியில் அரங்கமேறிநின்று)

𑌦𑍍𑌰𑍋𑌣𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌰𑍍𑌜𑍁𑌨𑌭𑍀𑌮𑌦𑍂𑌤𑍋
𑌯𑌃 𑌕𑌰𑍍𑌣𑌧𑌾𑌰𑌃 𑌶𑌕𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 ।
𑌦𑍁𑌰𑍍𑌯𑍋𑌧𑌨𑍋 𑌭𑍀𑌷𑍍𑌮𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌃 𑌸
𑌪𑌾𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌰𑌾𑌟𑍋𑌤𑍍𑌤𑌰𑌗𑍋𑌭𑌿𑌮𑌨𑍍𑌯𑍁𑌃 ॥

கருத்ததான காக்கைநிறமுடையவரும், ராஜ்யவிஷயமாக அர்ஜுனனுக்காகவும் பீமனுக்காகவும் தூதுசென்றவரும், பக்ஷியரசனை கெருடனையாள்பவரும், போரில் யாவராலும் வெல்ல முடியாதவரும், தீயோரை நல்வழிப்படுத்துபவரும், நல்லகாரியங்களைச் செய்பவரும், வேள்விகளில் தொழப்பெற்றவரும், ஆதி புருஷருமான ஸ்ரீகிருஷ்ணபகவான் (நம்மைக்) காப்பாராக.

[இந்தச் சுலோகத்தில் வடமொழிச்சொற்களால் பின் நிகழும் கதையை சூசிப்பித்திருப்பது கவனிக்கத்தக்கது.]

(சற்றுத்தூரம்சென்று) பெரியோர்களிடம் விண்ணப்பம்செய்து கொள்கிறேன். ஓ! பெரியோர்களிடம் தெரிவித்துக்கொள்ள நான் சித்தமாயிருக்குங்கால், ஏதோ அரவம் கேட்கப்படுகிறதே!; அடே! பார்க்கிறேன்..

(அரங்கத்தில்) குருகுலமன்னனை துரியோதனனுடைய வேள்விச்சிறப்பானது நிரம்பவும் வியக்கற்பாலது.

ஸூத்ரதாரன்:—இருக்கட்டும்; அறிந்தேன்.

[illegible]
[illegible] ।
𑌯𑌜𑍍𑌞𑍋 𑌦𑍁𑌰𑍍𑌯𑍋𑌧𑌨𑌸𑍍𑌯𑍈𑌷
𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥

பரிவாரங்களுடனும் மனைவிமக்களுடனும் அரசர்கள் வந்திருக்கிறார்கள்; குருகுலவேந்தனான துர்யோதனனுடைய வேள்வியானது மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. (வெளியேறுதல்)

ஸ்தாபனை.

(பிறகு மூன்று அந்தணர்கள் அரங்கத்தில் நுழைகிறார்கள்.)

எல்லோரும்:—மன்னனின் வேள்விச்சிறப்பு மிகவும் ஆச்சரியமானது.

முதலாமவர்:—இங்கேயோவென்றால்,

த்விஜோச்சிஷ்டைரந்நை: ப்ரகாமஸம்ஸ்த்ருதா: காஶா இவ திஶோ
ஹவிர்தூமை: ஸவ்ருக்ஷா: குஸுமஸுரபீப்யாஸ்தருகணா: ।
ம்ருகைர்வ்யாக்ரா வ்யாக்ரா வநநிரதஸிம்ஹாஶ்ச கிரயோ
ந்ருபே தீக்ஷாம் ப்ராப்தே ஜகதபி ஸமம் தீக்ஷிதமிவ ॥

இந்த வேள்வித்தலத்தில் அந்தணர் புசித்துமிகுந்த அன்னக் குவியல்களால், திசைகள், புஷ்பித்திருக்கிற நாணற்புற்களால் நிரப்பப்பட்டவைபோல் விளங்குகின்றன; விருக்ஷங்களோ, அவிப்புகைகளால் பூமணம் நிறைந்தனவாய்க் காணப்படுகின்றன; இவ்விடத்தில் மான்களும் புலிகளும் ஒன்றாய்க் குலவுகின்றன; அருகேயுள்ள மலைகளில் சிங்கங்கள் பிறருக்குத் தீங்கொன்றும் விளைக்காதனவாய் இருக்கின்றன; அரசன் யாகதீக்ஷையிலிருக்கும்போது, உலகமெல்லாம் தீக்ஷையையநுசரித்து மன அமைதியுடன் இருப்பதுபோலத் தோன்றுகிறது.

இரண்டாமவர்:—நீங்கள் நன்கு உரைத்தீர்கள்.

த்ருப்தோऽக்நிர்ஹவிஷா த்விஜாஸ்ச விபவைஸ்த்ருப்தா: ஸுரேந்த்ராதயஸ்
த்ருப்தா: பக்ஷிகணாஸ்ச மாநுஷகணாஸ்த்ருப்தாந்நபாநாஶநை: ।
ஹ்ருஷ்டம் ஸம்ப்ரதி ஸர்வதோ ஜகதிதம் ராஜ்ஞோ குணை: ஸ்வைர்குணை:
ரேவம் லோகமஹாப்ரமோதஜனகம் ஸ்வர்கோऽபி ஜேதும் க்ஷம: ॥



தேவேந்திரன்முதலான தேவர்கள் உணவைக்கொள்ளும் முகமான அக்கினி, ஹவிஸ்ஸால் திருப்தியடைந்தது; பொருளால் அந்தணர்கள் திருப்தியடைந்தார்கள்; மனிதர்களும் பசுபக்ஷிகளும் நல்லுணவால் திருப்தியடைந்தனர்; அரசனிடம் விளங்கும் நற்குணங்களைப் புகழ்ந்துகொண்டு மானிடவுலகமே களிப்படைகிறது; ஆதலால் பூவுலகமானது வானுலகை எல்லாப்படியாலும் அதிகரிப்பதுபோலும்.

மூன்றாமவர்:—இந்தப் பார்ப்பனர்கள் மிகப்பெரியோர்கள்.

ராஜ்ஞாம் வேஷ்டநபட்டக்ருஷ்டசரணா:
ஶ்லாக்யா ப்ரபாவஶ்ருதா
வார்த்தக்யேऽபி விவர்த்தமாநநியமா:
ஸ்வாத்யாயஸங்கீர்த்தநை: ।
விஷ்டம்பயஷ்டி வய:ப்ரகர்ஷஶிதிலா
யஷ்டித்ரிபாதக்ரமா:
ஶிஷ்யஸ்கந்தநிவேஶிதாங்கிதகரா
ஜீர்ணா கஜேந்த்ரா இவ ॥

வேள்வியைக் காணவந்திருப்பவர்களான அரசர்களுடைய தலைப்பாகைகளால் தொடப்பெற்ற திருவடிகளுடன்கூடின அந்தணப்பெரியோர்கள், மிகவும் புகழ்வாய்ந்தவர்கள்; முதிர்ந்த வயதிலும் நியமம் தவறாமலும் வேதமோதிக்கொண்டும் இருக்கிறார்கள்; கிழத்தனத்தால் தேகம் தளர்ந்து கோலூன்றி மூன்றுகால்களால் நடப்பவர்கள்போல் தோன்றுகிறார்கள்; சீடர்களின் தோள்களைக் கைகளால் பிடித்துக்கொண்டு முதிர்ந்த யானைகளைப்போல், மெல்ல மெல்லச் செல்கிறார்கள். (காண்மின்)

எல்லோரும்:—ஓ! ஓ! சிறுவர்காள்! யாகத்தினிறுதியில் 'அவபிருதஸ்நாநம்' ஆகுமுன் யாகசாலையில் நெருப்பை மூட்டி விடாதீர்கள்.

முதலாமவர்:—சீ! சீ! சிறுவர்கள் சபலத்தனத்தைக் காட்டி விட்டார்களே,

ஸஷாமெஹா! தீவ்யமிவாகநகயேஹாமெஜ
வாஸாதிவஸயா
வெதாஹிஜெளகிகாஹிம் ஷிஜஐவவ்யஷமும்
வாமெமெ நவஸஹமெத।
நாதயஸேஷ வ்யஷா ஹரிதகாஸதயா
வெதீவரிவ்யதா
ஸ்ராஹுஂஸஂ வெஷ யமொஹஜ ஐவ நயீநீம்
ஹாஷூஂ ப்ரவிஶதி॥

யூபஸ்தம்பங்கள் நடப்பெற்ற இவ்வேள்வித்தலமானது பொற்கைகளுடன் கூடியதுபோல் விளங்குகிறது; தன்னருகில், அதார்மிகன் நெருங்குவதை அந்தணர் பொறுததுபோல் யாகாக்கினியானது, மந்திரங்களால் தூய்மைபெறாத லௌகிகாக்கினி தன்னிடம் அணுகுவதைப் பொறுக்கவில்லை; உலராத பச்சைத் தருப்பைப்புற்களால் சூழப்பரப்பப்பெற்ற "யாகவேதி"யானது அதிகமாக எரிக்கப்படவில்லை; மலர்ந்த புஷ்பங்கள்நிறைந்த தாமரையோடையில் யானை நுழைவதுபோல், யஜமானன் முதலியோர் தங்குவதற்காக முன்புறம் கட்டப்பெற்றிருக்கிற சிறுவீடுகளில் யாகப்புகையும் பிரவேசிக்கிறது.

இரண்டாமவர்:—இது இவ்விதமே.

ஸுஹிர ஹிஜயாஷெஷ வீமெதநிவாஸ்யெதமெஜெ:।
காமெவ்யாஸகாஹவாஸிஜெராஜாதிஜாதிஸயாஷ்வ॥

ஒரு நற்குலத்திற் பிறந்த நல்லனொருவன், துஷ்டனை ஜாதியைக்கண்டுவிலகுவதுபோல், வேறு நல்லிடத்தில் தூய்மைமாறாது காக்கப்பெறுகிறதான "ஶாஹவதா" மென்ற அக்கியானது, அதனுடன் வேறு நெருப்புக் கலந்துவிடுமோ வென்ற அச்சமிகுதியால், வேள்வியிடத்திலிருந்து அந்தணர்களால் மிகவும் சாவதானமாக வெளியே கொணரப்பெறுகிறது.

மூன்றாமவர்:—தாங்களிருவரும் மற்றொன்றையும் காண்பீராக.



ஶகடீ வ வ்யதாவமணா ஸிவ்யோநாவி வாஸிணா।
நாஸீவொவாதாவதா வாஷுஹெநஹொத॥

தன் புதல்வனையிழந்தவளான மடந்தை ஒருத்தி கண்களால் நீரைச் சொரிந்தாலும், குழந்தைமீதுள்ள அன்பின்மிகுதியால், துக்கத்தை முழுதும் நீக்காததுபோல், வேள்விக்கான நெய்க்குடங்கள் நிறைந்த சிறுவண்டியானது, நீரால் தெளிக்கப்பட்டாலும், நெய்யின்மிகுதியால் முழுதும் அணையாமல் எரிந்துகொண்டேயிருக்கிறது.

முதலாமவர்:—நன்கு உரைத்தீர்.

ஸதாம் வக்யாஸ்ய யஶகடீம் ஷஹூம் ஸஹெயாஷ்யெதா
ஷஹெ ஶஷ்யதி நீஶாஷுதயா வஹி: ஶமெநவாஷ ந:
வாமெதநாகாஷீத: ஶிவாவரிஶதஶகம் கூஷெணாஶமெதா
நெதீஷணுஷணுகூதவவ: ஸம்பமாயமெத வாவக:॥

இவ்வங்கியானது, முதலிற் பச்சைப்புற்கள் நிறைந்த இடத்திற் பற்றியதால் குறுகிய ஜ்வாலையுடன் கூடியதாயிருந்து, அவைகள் நெருப்பினுல் காய்ச்சப்பட்டு உலர்ந்தபிறகு, அரசனுடைய வேள்வித்தேரை மெல்லமெல்லப் பற்றுகிறது; அப்போது காற்றினுல் வீசப்பெற்றுப் பெரிய சுவாலைகளுடன்கூடி, வரிசையாக வண்டிச்சக்கரத்தில் பிரவேசித்து வட்டவடிவங்கொண்டு, பரிதிபோல்விளங்குகிறது.

இரண்டாமவர்:—தாங்களிருவரும் மற்றொன்றையும் காண்மின்கள்.

வஸீகமொ ஷஹமெநந வீதா
ஸஜகொடமெ: வஂவ ஸஂஸஂஜம்ஶா:।
ஸஂவிவஹஸ்ய நாஸ்ய ஷெஹா
ஷிநி: ஸ்யதா: வஂஷயமெஹியாணி॥

மரிக்குந்தருவாயில், ஒருவன் தேகத்திலிருந்து ஒருங்கே வெளியேறுகிற ஐந்து இந்திரியங்களைப்போல நெருப்பினுல் (சுடப்பெற்ற) புற்றிலிருந்து ஐந்து அரவங்கள் ஒன்றுய்க்கிளம்புகின்றன.

மூன்றுமவர்:—வேறுன ஈதொன்றைத் தாங்கள் காண்பீர்களாக.

தஹ்யமாநஸ்ய வ்ருக்ஷஸ்ய ஸாநிலேந ஸமாக்நிநா ।
கோடராந்நிஸ்ஸ்ருதா: ஸர்பா: ப்ராணா இவ ஸமாகதா: ॥

காற்றுடன்கூடின வேள்வித்தீயால், சரீரம் எரிக்கப்படும்போது, ஐந்து பிராணனும் வெளியேறுவதுபோல், மரப்பொந்தாகிற தேகத்திலிருந்து பறவைகள் வெளியேறுகின்றன.

முதலாமவர்:—இது அவ்விதமே!

ஶுஷ்கேணைகேந வ்ருக்ஷேண வநம் புஷ்பிதபாதபம் ।
குலம் சாரித்ரஹீநேந புருஷேணேவ தஹ்யதே ॥

தீய ஒழுக்கினனுன புருஷனுல் நற்குலம் தூஷிக்கப்படுவது போல், வற்றியுலர்ந்த மரத்தால் புஷ்பித்தவைகளான மரங்கள் நிறைந்த இக்கானகம் எரிக்கப்படுகிறது.

இரண்டாமவர்:—

ஸ்வநந்தி வாதோத்தூதா வம்ஶா தஹ்யமாநா ஸமாக்நிநா ।
ஊர்த்வம் நீசைஶ்ச நந்த்யந்தே லக்ஷ்ம்ய இவ ॥

யாகாக்கினியால் தஹிக்கப்பட்டனவும் காற்றினுல் அலைக்கப்பட்டனவுமான மூங்கில்கள், மனிதர்களுடைய செல்வம்போல் மேலே கிளம்புகின்றன; கீழே தணிகின்றன.

[தொடரும்.]

V. S R

# பழையவற்றிற்பழைய
# குறள்வெண்பாக்கள்.

[நல்லூர், சுவாமி. ஞானப்பிரகாசர் எழுதுவது.]

தடங்கருணைப் பரங்கடவுளருளால் தமிழ்ப்பாஷையின் ஆதி அடிகளை (-தாதுக்களை) முதன்முதல் ஆராய்ந்து கண்டுகொள்ளும் பாக்கியம் எனக்குக் கிட்டுவதாயிற்று. இதனைத் தமிழுலகம் இதுவரையில் நன்ருய் அறியும். எனது "தமிழ் அமைப்புற்ற வரலாறு", "தமிழ்ச்சொற்பிறப்பு ஆராய்ச்சி" எனும் நூல்களையும், தமிழிலும் ஆங்கிலத்திலும் காலத்துக்குக்காலம் யான் வெளிப்படுத்திய பல பத்திரிகைவிஷயங்களையும் அநேகர் பார்த்திருப்பார்கள். இவைகளில், தமிழ் அடிகளே சுமேரியம் முதலிய பண்டை மொழிகளுக்கும், ஸம்ஸ்க்ருதம் கிரேக்கம் லத்தீனியம் கொதிக்கம் சர்மனியம் பழைய ஆங்கிலம் முதலான இந்து-ஐரோப்பிய பாஷைகளுக்கும் அத்திவாரமாயின என்ற முடிபு, பல அறிஞர்கள் உவந்து ஏற்றுக்கொள்ளும்படியாக நிலைநாட்டப்பட்டது. தமிழ்ச்சொற்களையும் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, கோண்டி, குறாக், கூயி, பிருகூயி ஆதிய தமிழ்ப் பாகதச்சொற்களையும் ஒப்புநோக்கி, தமிழ் அடிகளைக் கண்டுபிடித்து, அவ்வடிகளினின்றே இந்து-ஐரோப்பியமொழிகள் கிளைத்து எழுந்தன என்ற உண்மையை யான் எடுத்துச்சொல்லிய அளவில் தமிழின்பழமை ஒருவாறு தாபிக்கப்படலாயிற்று.

ஆயின், கிறிஸ்தவாப்தத்திற்கு மிக முற்பட்ட பூர்வதமிழ் எழுத்துக்களையாவது, அவ்வெழுத்துக்களில் வரையப்பெற்ற வாக்கியங்களையாவது அறிந்திலேன். இவற்றைக் கண்டுபிடிக்கும் நல்ல திட்டம் வேறெருவருக்குக் கிடைப்பதாயிற்று. அவர் யாரெனில், சில மாதங்களின்முன் என்னேடு கூடவிருந்து சிந்து நதிப் பள்ளத்தாக்குப் பழஞ்சாசனங்களை வாசித்து நிரைப்படுத்தவரான சங். ஹிறஸ் சுவாமிகள் எனும் இந்தியசரித்திர ஆராய்ச்சி நிபுணராவர். இவர், யான் ஆதித்தமிழ்ச்சொற்களைக் கண்டுபிடித்தமையைக் கேள்வியுற்று, அவ் ஆதித்தமிழேபோல் தோன்றிய அச் சாசன எழுத்துக்களை எனது உதவியோடு நிச்சயப்படுத்திக் கொள்ளும்பொருட்டு, பம்பாயிலிருந்து இங்கு வந்தவர். இவர்

கொண்டுவந்த சாசனப்பிரதிகளில் 1890 உண்டு. இவற்றில் பெரும்பாலனவற்றை இற்றைக்குப் பதினறு பதினைந்து வருஷங்களின் முன் மேற்சொல்லிய இடத்திலே இருந்த இரு மணல்திடர்களை அகழ்ந்துபார்த்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள், அடித்தளத்திலே கிலமாய்க்கிடந்த இரு பட்டணங்களிலே கண்டெடுத்தார்கள். இப்பட்டணங்களுக்கு மகெஞ்சதரு என்றும் அறப்பா என்றும் பெயர் சொல்லப்படும். இவை சிந்துநதியின் பிரவாகத்தினல் உண்டான வண்டல்களால் படிப்படியாக மூடுண்டு, நாற்பது ஐம்பது அடிக்குக்கீழ் அழிந்து கிடந்தன. இடிந்து, மட்குவியலுள் மறைந்து கிடந்த வீடு ஆதியவற்றுள் கண்டெடுத்த "முத்திரைகள்" ஒருவகை மாக்கல்லிலும், தந்தம், செப்புத்தகடு முதலியவைகளிலும் செய்யப்பட்டிருந்தன. இவைகளில் செதுக்கியிருந்த சித்திரலிபியை இதுவரையில் எவராவது வாசிக்க அறிந்தாரில்லை. இவ்வகையான லிபியில் எழுதினவர்கள் யார் என்பதும் தெரிந்திலது. ஆயினும், மேற்சொல்லிய பட்டணங்களின் தூர்வைகளுள்ளே கண்டெடுத்த பழைய விக்கிரகங்கள், உருவங்கள், மட்கலங்கள், ஆபரணங்கள், கருவிகள் ஆதியவற்றின் படங்களோடு "முத்திரை"ப் படங்களையும் அச்சிட்டு மூன்று பெருங் காண்டங்களாக 1931-ம் ஆண்டு வெளிப்படுத்திய சேர் யோன்மாஷல் என்பவர் மகெஞ்சதரு—அறப்பாவின் குடிகள் ஒருவேளை திராவிடராய் இருந்திருக்கலாம் என்று ஒரு குறிப்புக் காட்டியிருந்தார். அவருடைய அருமையான நூல் வெளிப்பட்டவுடனே, ஒரு நண்பருதவியால், அதனை இருநூறுரூபாவரையில் கொடுத்து வாங்கிக் கொண்ட யான், பல ஏதுக்களையும் ஆராய்ந்து மகெஞ்சதரு—அறப்பாக் குடிகள் சந்தேகமின்றிப் பழந்தமிழரே, அவரது பாஷை பழந்தமிழே என அறுதியிட்டு ஆங்கில "இண்டிப்பெண்டன்ற்" முதலிய சில பத்திரிகைகளில் எழுதினேன். இது நாலுவருஷங்களின் முன். ஆயினும் முத்திரைகளை வாசிக்கவோ தெரியவில்லை. இப்போது ஹிறஸ் சுவாமிகள் அவற்றை வாசிக்குந் திறவுகோலைத்தர, அவரோடு யானும் வாசித்துப் பாஷைமுழுதும் பழந்தமிழே என்று அறிந்து ஆனந்தசாகரத்துள் அமிழ்ந்தேன்.

இதுவரையில் பழந்தமிழ் எழுத்துக்களை ஆராய்ந்தோர் கருத்துப்படி, கி. பி. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ்ச்சாசனங்கள் கிடையா. ஆயின் ஸ்ரீ K. V. சுப்பிரமணிய



ஐயரவர்கள், தாம் தென்னிந்தியாவிற் கண்டுபிடித்து வாசித்த குகைச்சாசனங்கள் சில கி. மு. மூன்றாம்நூற்றாண்டளவில் உள்ளன என்பர். இவையெல்லாம் பிராமி எனும் வரியெழுத்தில் உள்ளவை. பிராமி எழுத்து தற்காலத் தமிழ் எழுத்துக்கு அடிப்படையான வரியெழுத்து. சிந்துப்பள்ளத்தாக்கின் சித்திரலிபி எனும் உருவெழுத்துக்களோ கி. மு. ஐம்பதுநூற்றாண்டுவரையில் உள்ளனவாம். இவைகள்,

காணப் பட்ட உருவம் எல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி,
வழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப் படுவது உருவெழுத் தாகும்

என முன்னோர் விவரித்தபடி (யாப்பருங்கலவிருத்தி. 535–ம் பக்கம்) மனிதன், மிருகம், சரீர அவயவம், மரம், செடி, சூரியன், சந்திரன் ஆதியவற்றின் படத்தைத் தந்து, அவற்றின் மூலமாய் முதற்கண் அவற்றின் பெயர்களையும், அப்பால் சார்புபற்றி விரிதல் இனந்தழுவல் இயைபுடைமை ஆதிய பொருட்டிரிபுமுறைகளால், வெவ்வேறு பொருளையும் விளக்குகின்ற எழுத்துக்களாகின்றன. (இவ் உருவெழுத்துக்களிற் சில தாம், வடிவந்திரிந்து, எங் காலத்து வரியெழுத்துக்கள் ஆயின.) கி. மு. மூன்றாம்நூற்றாண்டுக்குமுன் தமிழ் எழுத்தே கிடையாதென்றிருந்த நாம், இப்பொழுது கி. மு. ஐம்பதாம்நூற்றாண்டளவில் எமது தற்கால எழுத்துக்களுக்கு மாதாவான ஓர் எழுத்துவகை இருக்கக்கண்டு மகிழ்கின்றோம். சிந்துப்பள்ளத்தாக்கில் அகழ்ந்து கண்டெடுத்த உருவெழுத்துப் போன்றவைகளில் வரையப்பெற்ற நெடுஞ்சாசனமொன்று விக்கிரம சோழநாட்டிலுள்ள ஒரு மலையிற் கண்டுபிடிக்கப்பட்டதாக இந்நாட்களில் ஒரு செய்திபத்திரிகைகளில் வரக்கண்டோம். சங்குதரு எனும் இடத்திலும் பழைய பட்டண அழிவுகளுள் "முத்திரைச்" சாசனங்கள் சமீபகாலத்தில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. முந்திய பூர்வ சாசனங்களை வாசிக்க அறிந்த ஹிறஸ் சுவாமிகள் இவற்றையும் வாசிப்பவராவார் என்பதிற் சந்தேகம் இன்று.

தமிழ் வரிவெழுத்தின் பழமையை இதுகாறும் நாம் அறியாதிருந்தமைபோலவே, தமிழ்ப்பாட்டுக்கள் வரிவடிவில் விளங்கிய காலத்தையும் அறியாதுபோனேம். புறநானூறு ஆதிய கோவை நூல்களில் உள்ள பாடல்களை அதிபழமையானவைகள் என்பதும்,

அவைகள், ஆகக்கூடி, கி. பி. இரண்டாம்நூற்றாண்டுக்கு முந்தியவை அல்ல என்பதும், ஒருவேளை சில பாட்டுக்கள் கி. மு. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் இயற்றுண்டு வாய்ப்பாடமாய் வழங்கி, பின் கி. பி. நூற்றாண்டுகளிலேயே வரிவடிவில் இயங்குவன ஆயின என்பதும் ஆராய்ச்சிநிபுணர்களின் அபிமதமாய் இருந்தது. ஆயின் சிந்துப்பள்ளத்தாக்கின் சாசனங்களுள் ஆசிரியத்தளை பொருந்திய சில கவிகளும், எதுகைமோனைகளோடு கூடிய கவிவடிவான பழமொழிகள் போன்ற சிறுச்சிறு வாக்கியங்களும், குறள் வெண்பாவுக்கு உரிய சகல விதிகளும் அமைந்த மூன்றுபாட்டுக்களும் அகப்பட்டன. குறட்பாக்களுள் ஒன்றை ஈங்குக் குறிக்கின்றேன்.

> காலோர்மீ னன்மீனம் காண்கடஏர் வல்இல் அது
> கலகுரிர்வல் கெய்குடகு நால்.

இதனைத் தற்காலத் தமிழில் திருப்பி எழுதுவோமாயின் பின்வருமாறு வசனரூபமாய்நிற்கும்.

காலொர் (எனும் குலத்தவர்) மீனன் (உடைய) மீனத்தைக் கண்டு (கொண்டு), கடந்து ஏறிப் (போய்ப் பிடித்த) வல்லில் (ஆகிய கோட்டைக்கு) உரியவர் (யாரெனில்), கலந்த ஊரவர் (ஆன) வலிய செயல் அல்லது கை (உடைய) குடகர் பல்லோர் (ஆவர்).

ஒற்றுமைகொண்ட ஊரவர்களான பல வலிய குடகரது கோட்டையை மீனனுடைய வெள்ளி பார்த்துக் கடந்துசென்ற காலொர் பிடித்தனர் என்றது பிண்டப்பொருள். இச் சாசனம் இற்றைக்கு ஏழாயிரம்வருஷங்களுக்குமுன் எழுதப்பட்டது என்றால், எம் தமிழ்முன்னோரின் நாகரிகமும் கல்வித்திறனும் இருந்தபடி என்னே!

மேலைக் குறட்பாவிலே மீனன், மீனம் எனும் இருசொற்களுக்கும் மீனின்வடிவமே உருவெழுத்தாக நிற்கின்றது. இருசொல்லும் "மின்"னுதல் எனும் அடியினின்று பிறந்தவை எனும் எனது கொள்கைக்கு இது ஒரு நற்சான்று. மீனன் என்ற சொல்லிற்கு, மீன் உருவத்தின் தலையில் இரு கைகளுக்குரிய இரு கோடுகள் முகட்டுவடிவமாய் இணைந்திருக்கின்றன. இரு கைகளைக் காட்டும் கோடுகளோடு, இரு கால்களுக்கு இருகோடும், உடலுக்கு நிமிர்ந்த கோடும் உள்ள உருவமே சிந்துப்பள்ளத்தாக்கு உருவெழுத்தில் 'ஆள்' என்று வாசிக்கப்படும். ஆதலால் ஆள் எனும் சொல்லைக் குறிக்கும் உருவத்தின் கைப்பாகம் 'அன்' பொருளோடு மீன் தலையில் பொருந்தி மீனன் என்ற சொல்லாயிற்று என்பது ஹிறஸ் சுவாமிகளது கருத்து. இது ஆள் எனும் சொல்லினின்றே ஆண் எனுஞ் சொல்லும், அப்பால் அன், அள் எனும் விகுதிகளும் பிறந்தன எனும் எனது ("தமிழ் அமைப்புற்ற வரலாறு" எனும் நூலில் வெளிப்படுத்திய) கொள்கையை ஆதரிக்கின்றது. அதுமட்டா! சிந்துப் பள்ளத்தாக்கு உருவெழுத்துக்களில் ஆள், ஆண் எனும் இருசொல்லுக்கும் ஒரு உருவமே சிறிது மாற்றத்தோடு பொறித்திருக்கின்றமையும் எனது கொள்கைக்குப் பிரபல ஆதாரமாம்.



காண் கட ஏர் எனும் மூன்று வினைகளும் ரூபகாரணம் இன்றி அடிமாத்திரமாய்நிற்பதை நோக்குக. இவை மூன்றும் எனது சொற்பிறப்பு—ஒப்பியல் அகராதியில் வழியடிகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குத் தலையடி அண், அட், எற் என்பனவாகும். சிந்துப்பள்ளத்தாக்காரின் பாஷை எவ்வளவு பழமையானது என்பது இவைபோன்ற சொற்களால் விளக்கமாகும்.

வல்லில் அது என்றதில் 'வல்லில்' இலக்கியங்களுள் காணப்படாத ஒரு சொல். 'அது' எனுஞ் சொல்லின் ஆதி அர்த்தமும் அவதானிக்கத்தக்கது. இச்சொல்லின் அடி அத், அத்து (="சேர்தல், சேர்த்தல்") என்பது. வல்லிலது எனுமிடத்து கோட்டையானது யாருக்குச் சேர்ந்ததோ அவர்கள்; அல்லது கோட்டைக்கு உரியவர்கள் என்றது தொனிக்கும். பிற்காலம் "அது" உடைமைப் பொருள்கொண்டது இவ்வாறேயாம். இங்கு அகரம் சேய்மையை அன்று அண்மையையே காட்டிற்று. சாசனங்களில், "அது" மீனம் என்றதிற்போல அது எனும் சொல் தலையிடத்தில் வரும்போது, அண்மைச்சுட்டாகவே தெரிகிறது. அகரம் ஆதியில் அண்மையை விளக்கிற்று எனும் எனது கொள்கைக்கு இதனால் ஆதாரங்கிடைக்கின்றது.

கலகுரிர் (கலக்கூரிர்) என்ற தொடரில் ககரமெய் இரட்டியாமல் நிற்பதும், ககர ஊகாரத்துக்குப் பதில் ககர உகாம் நிற்பதும் ஒரு விசேஷம். தற்காலம் கலந்த ஊரவர் எனில் கலக்கூரவர் என்றல்ல, கலப்பூரவர் என வரும். ஊரவர் என்றது 'ஊரிர்' என நிற்பது வேறொன்று. அர் எனும் பன்மை விகுதிக்கு இர் எனும் உருவமே உற்பத்தியாகும் என யான் "தமிழமைப்புற்ற வரலாறு"

53-ம் பக்கத்திற் காட்டியதற்கு இது சான்றுகின்றது. பழைய இர் விகுதியை 'வேளிர்,' 'மகளிர்' ஆதிய சில சொற்களில் இன்றைக்கும் காண்கின்றனமே.

வல்கெய் என்றது, மோனையின்படி, வல்கையென்றிருத்தலே பொருத்தம். இதனால் கெய்க்கும் கைக்கும் ஒரு குறியையே வழங்கினர் என்று தெரிகிறது. உள்ளபடி, கெய் எனும் சொல்லிலிருந்தே 'கை' வந்தது என எனது அகராதி காட்டும். கெய்க்கு அடிச்சொல் எய்-தல். அதாவது 'மேலெடுத்தல்,' 'யாதொன்றைச் செய்தல்.' கன்னடத்தில் இன்றைக்கும் கையைக் கெய்யென்றும் செய்தலைக் கெய்தலென்றும் சொல்வர். ஆதியில் ஒன்றாயிருந்த கெய் எனுஞ்சொல் பிற்காலம் தமிழில் அவயவத்தைக்காட்டக் கையென்றும் வினையைக் காட்டச் செய் என்றும் வரலாயிற்று. ஆயினும், சில பழம் இலக்கியங்களில் 'செய்' என்ற வினையும் கையென்றிருக்கிறது. "எய்த்தடிச்சிலம் பிரங்கு மின்குரல் கைத்தெடுத்தலில்" (சிந்தாமணி. முத். 85) என்பதிற் கைத்தல் செலுத்துதல். இதில் எய்தல் எனும் அடியர்த்தமும் விளங்குதல் காண்க. இவ்வாறே "கையறுநிலை" என்றதில் -கை செய்தற்பொருள் கொள்ளுகின்றது. கையொழிதல், கைதூவுதல் என்ற தொடர்களில் செயலும் கையும் எனும் இருபொருளும் கலந்து தோன்றுகின்றன.

குடகு என்ற சொற்குச் சித்திரலிபியிற்கண்ட உருவம் வாலுள்ள ஒரு ஆளின் ரேகைச்சித்திரமேயாம். இதனால், குரங்குச் சொல்லிற்குக் குடகுதலே (குரங்குதல்) உற்பத்தியாம் என யான் காட்டியது வலியுறுத்தப்படும். (தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி 10-ம் பக்.) குடகு என்றது குடகர் எனும் சாதியாரைக் குறிக்கின்றது. இச் சொற்குக் குடங்கிய உருவமுள்ள பிராணியின் உருவம் அமைக்கப்பட்டது பொருத்தமேயாகும்.

ஈற்றில் நால் என்ற சொல் 'நீண்டது, விரிந்தது' எனும் அர்த்தமுள்ளது ஆதலால், அநேகர் எனும் பொருளைக் கொள்ளுவதாயிற்று. நாலுபேர் அறிந்தது எனும்போது அநேகர் அறிந்தது என்பதே கருத்தாகுமன்றோ!

உ

# கம்பராமாயண சாரம்.*

[தேர்ந்தெடுத்த இனியகவிகள் விளக்கவுரை கதைத்தொடர்ச்சி அடங்கியது.]

## யுத்த காண்டம்.

[இராமனது வானரசேனைக்கும் இராவணனது இராட்சசசேனைக்கும் இடையே நிகழ்ந்த போர்களைக் கூறுவது.]

### கடவுள்வாழ்த்து

1 ஒன்றே யென்னி னொன்றேயாம் பலவென் றுரைக்கிற்[1] பலவேயாம்
அன்றே யென்னி னன்றேயா மாமென் றுரைக்கி[2] னாமேயாம்
இன்றே யென்னி னின்றேயா முளதென் றுரைக்கி[3] னுளதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங் கென்னோ பிழைப்பம்மா[4].

கொண்டுகூட்டு:† ஒன்றே என்னின் ஒன்றே ஆம்; பல என்று உரைக்கின் பலவே ஆம்: அன்றே என்னின் அன்றே ஆம்; ஆம் என்று உரைக்கின் ஆமே ஆம்: இன்றே என்னின் இன்றே ஆம்; உளதென்று உரைக்கின் உளதே ஆம்: நம்பி குடிவாழ்க்கை நன்றே! அம்மா! இங்கு, நமக்குப் பிழைப்பு என்னோ!

---

* [All Rights Reserved by the Author.] இந்நூல், 'கம்பராமாயண இன்கவித்திரட்டு' என்ற பெயருடன் 1922-ம் வருடம் தொடங்கி, இந்தப் பத்திரிகையில் வெளியாகிவந்தது. 'பஞ்சாமிர்தம்' 'தமிழர்நேசன்' என்ற பத்திரிகைகளில் பிரசுரமான ஆரம்பப்பகுதியொழியச் சுந்தரகாண்டம் முழுவதும் முந்திய நான்குகாண்டங்களும் இப் பத்திரிகையில் வெளியாகியிருக்கின்றன. சென்றவருடத்தில் பாலகாண்டமும் இந்த வருடத்தில் அயோத்தியாகாண்டமும் புத்தகரூபமாகப் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றன. ஆரணியகாண்டம் அச்சிலிருக்கின்றது. பதிப்பிக்கப்பெற்றிருக்கின்ற காண்டங்களிற் செய்திருக்கின்ற, பாட்டுக்களைச் சந்திபிரியாதெழுதல் முதலிய வேறுபாடுகள், இந்தக் காண்டத்திலே பின்பற்றப்பெற்றிருக்கின்றன.

† அன்னுவயம்—உரைமுறை (Prose order) — வசனநடை.

பொருள்: கடவுளாகிய பரம்பொருள், ஒருபொருளென்றால், ஒருபொருளாம்; பலபொருளென்றால், பலபொருளாம்: யாதாயினு மொருபொருளைச்சுட்டி அப்பொருளன்றென்றால், அப்பொரு ளன்றாம்; அப்பொருளாமென்றால், அப்பொருளாம்: இன்மைப் பொருளென்றால், இன்மைப்பொருளாம்; உண்மைப்பொருளென் றால், உண்மைப்பொருளாம்: (இப்படியாக முரண்பட்டநிலைமை யுடைய) ஆண்டவன்வாழ்க்கை நன்றாயிருக்கின்றது! அம்மா! (நம்முடைய ஆண்டவன்பிழைப்பு இப்படியானால், அடிமைக ளாகிய) நம்முடைய பிழைப்பு எப்படியாம்?

நம்பி—ஆடவருட்சிறந்தோன்; புருடோத்தமன்: கடவுளைக்குறித்தது. 'இங்கு' என்பது, 'நம்பி குடிவாழ்க்கை இப்படியிருக்கும்போது' என்ற பொருள்பட நின்றது.

நம்பி என்பது பரமாத்துமாவையும் நமக்கு என்பதிலடங்கிய நாம் என்பது ஜீவாத்துமாக்களையும் குறித்தன. பரமான்மாவும் ஜீவான்மாவும் ஆண்டானும் அடிமையுமென்னும் வழக்கையுட்கொண்டு, 'ஆண்டவன்பாடு இப்பாடானால், அடிமைகள்பாடு எப்பாடு!' என்று விநோதமாகக் கூறிய கவித்துவசாதுரியம் கண்டு களிக்கத்தக்கது.

மூன்றடிகளில் சாத்திரரீதியாகக் கூறிய அரியபொருளை இனிய பொருளாக நான்காமடியிற் கவிமுறையாகக் கூறினர்.

கடவுளாகிய பரம்பொருள், — ஏகபராபரவஸ்து வென்பதுபற்றி ஒன்றாமென்றும், அதற்கெதிராக, சேதனாசேதனப் பொருள்கள்* பலவற்றி லும் அந்தரியாமி‡ யாயிருத்தலால் பலவாமென்றும்; எப்பொருளிலும் வியா பித்திருத்தல்கொண்டு எப்பொருளுமாமென்றும், அதற்கு மாறாக, வியாபகப் பொருள்§ வேறு வியாப்பியப்பொருள்† வேறாதலால், எப்பொருளு மன்றா மென்றும்; ஆத்திகருக்கு உள்ளதாமென்றும், அதற்கு எதிரிடையாக, நாத்திகருக்கு இல்லதாமென்றும் முரண்பட மொழிதற்கு (க் கடவுளாகிய பொருள்) இடந்தருகின்றதென்பது முதல் மூன்றடிப்பொருள். ஈசுவரன் தன்மை இப்படியானால், ஜீவரின்தன்மை எப்படியாமென்பது ஈற்றடிக் கருத்து.

---

* சேதனம்—அறிவுடைது. அசேதனம்—அறிவில்லாதது.

‡ அந்தரியாமி—உள்ளேயிருக்கிறவன்.

§ வியாபகம்—பரவியிருப்பது. †வியாப்பியம்—பரவப்பட்டிருப்பது.



'ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமும்' என்ற திருமூலர்வாக்குப்படி மானுடம்† ஒன்று, அதுபோலத் தெய்வமும் ஒன்று என்பது ஒரு கொள்கை; மனிதர், ஆரியர் மங்கோலியர் நிகிரோவர் முதலிய பல சாதிய ராவர், அதுபோலத் தெய்வமும் பலவாம் என்பது வேறொரு கொள்கை. இக் கொள்கைகள்பற்றிக் கடவுளாகிய பரம்பொருள் 'ஒன்றே யென்னின் ஒன்றேயாம்; பலவென் றுரைக்கிற் பலவேயாம்' என்றும், 'ஒன்று நீ அல்லை அன்றி ஒன்றில்லை' என்ற திருவாசகக்கருத்துப்படி 'அன்றே யென்னின் அன்றேயாம் ஆமென்றுரைக்கின் ஆமேயாம்' என்றும், 'உளனென இல னென இவைகுணம்' என்ற திருவாய்மொழியைப் பின்பற்றி 'இன்றே யென்னின் இன்றேயாம் உளதென் றுரைக்கின் உளதேயாம்' என்றும், கடவுள்தன்மையைக் கட்டுரைத்தல் கட்டசாத்தியமென்னுங் கருத்துடைய 'கோணை பெரிதுடைத்தெம் பெம்மானைக் கூறுதலே' என்ற திருவாய்மொழி யின் விநோதக்கூற்றை அநுகரித்து 'நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங் கென்னோ பிழைப்பம்மா' என்றும் கூறினரென்னலாம்.

கடவுளின் எதிரெதிரான இரட்டைத்தன்மைகள் பலவற்றை அடுக்கிக் கூறும் இக் கடவுள்வாழ்த்துக்கவி, திருவாய்மொழிப் பாசுரங்கள் சில வற்றை ஒத்திருக்கின்றது.. அவை வருமாறு:

நல்குரவும் செல்வும்* நரகும் சுவர்க்கமுமாய்
வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்

கண்ட இன்பதுன்பம் கலக்கங்களும் தேற்றமுமாய்த்
தண்டமும் தண்மையும் தழலோடு நிழல்களுமாய்.

ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்
காணலும் ஆகான் உளனல்லன் இல்லையல்லன்
பேணுங்காற் பேணும் உருவாகும் அல்லனுமாம்
கோணை பெரிதுடைத்தெம் பெம்மானைக் கூறுதலே.

இந்தப் பாட்டில், மக்களாவாரெல்லாருக்கும் சம்பந்தமான, 'மதங் களும் கடவுளும்' என்னும் பொருள்கள், விவகரித்து விளக்கப்பட்டிருக் கின்றன. 'எமக்கு மதமில்லை', 'எமக்குக் கடவுளில்லை' யென்பாரும் மதமும்

---

† மானுடம்—மனுகுலம்—மனுஷசாதி.

* செல்வுமென்பதன் விகாரம்.

கடவுளும் உடையரேயாவர். எவ்வாறெனில், மதமில்லையென்பார், மதமில்லையென்னும் மதமுடையராவர். இது பற்றியன்றே, நாத்திகத்தை ஒருமதமென்றும் நாத்திகரை ஒருமதத்தரென்றும் முன்னோர் வகைப்படுத்தினர். பயனிலையெனப்படும் ஒவ்வொரு வினைக்கும் எழுவாயென்னும் ஒவ்வொரு கருத்தா வேண்டும். நாத்திகர் 'கடவுள் இல்லை' யென்பர். அவர் 'இல்லை' யென்பதற்குக் கர்த்தா, (அதாவது அவர்கள் எப்பொருளை யில்லையென்கிறார்களோ, அப்பொருள்) கடவுளாயிருக்கும் உண்மை காண்க. இவ்வாறாக ஒருவாறு, நாத்திகரும் மதமும் கடவுளும் இல்லாரல்லாரென்பது போதருமென்க.

கம்பர், பைந்தமிழ்ப் பசும்பொன்கொண் டியற்றிய பாட்டுப் பாத்திரத்திலே, உயர்ந்த தத்துவத்தின் சாரமாகிய நல்லாவின் பாலைச் சிறந்த கவித்துவத் தீஞ்சுவைத்தேனுடன் செவ்விது கலந்து, விற்பன்ன விருந்தினர்குழாம் கூட்டுண்டு குதுகலித்துக் கொண்டாடும்வண்ணம், மூவாமருந்து சாவாமருந்தென்னும் தேவாமுதமும் நேராகாத விருந்துணவாக அளித்ததென்னும்படி யுள்ளது இந்தக் கடவுள்வாழ்த்துக்கவி.

பாடபேதங்கள்: [1] பலவேயென்னிற். [2] ஆமேயென்னி. [3] உளதென்றியம்பி, உளதென்றெண்ணி. [4] பிழையம்மா.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.



ஸ்ரீ:

# மதிப்புரை.

கம்பராமாயணசாரம்:—'கல்வியிற்பெரியன் கம்பன்' என்று தொன்றுதொட்டே ஆன்றோரால் நன்குமதிக்கப்பெற்ற கம்பநாடருடைய கல்வித்திறமும் சொல்வித்தகமும் இத்தகையவென வரையறுக்கப்படாத பெருமையுடையனவே. அவரால் இயற்றப்பெற்ற மாபெருங்காப்பியமாகிய இராமாயணத்தால் அறியக்கிடக்கும் நீதிகளும் நியாயங்களும் தருமசூக்குமங்களும் ஒழுக்கவழக்கங்களும் பல கலைமுடிவுகளும் கற்பனை அலங்காரங்களும் காவியச்சுவைகளும் முதலிய பலவகையான கவிநயங்களும் இன்னவென அளந்தறிதல் எவர்க்கும் இயலாதன. கவிநயங்களோ நவில்தொறும் புதிதுபுதிதாகத்தோன்றும் பொருளமைதியாற் பொலிந்துவிளங்குவன. அவையெல்லாம் ஒருவரால் அறியவும் சொல்லவும் ஒண்ணாதனவாயுள்ளன. அவற்றுள்ளும் ஓரொருவர் ஓரொருசெய்யுளில் ஓரொருபொருணயங்கண்டு புலப்படுத்துவதுண்டு; அங்ஙனம் புலப்பட்டவற்றையே பலரும் பன்முறை பாராட்டியுரைப்பதும் உண்டு; அவற்றை அடிக்கடிக்கேட்போமாயினும் உவப்பும் களிப்பும் ஒருங்குநிகழக் காண்கிறோம். அதனாலன்றோ 'கம்பநாடர்கவி போலக் கற்றோர்க்கிதயம் களியாதே'என்று பாராட்டப்பெறுகிறது. என்போலவென்னில் தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுதும் தீங்கனிவகையும் பன்முறைநுகரினும் நுகர்வோர்க்கு அவை சுவைகுன்றாது தெவிட்டாது மகிழ்வளிப்பதுபோலும் என்பதாம்.

இங்ஙனம் தெவிட்டாச்சுவையளிப்பதாகிய கம்பராமாயணப் பகுதிகளின் பலபிரதிகள்வைத்து ஒப்புநோக்கிச் சுத்தபாடமறிந்து நன்பொருள்தெரிந்து பன்முறை அநுபவித்துவந்தவரும் பெருங்குடிமரபிற் பிறந்தவரும் வித்வத்பிரபுவுமாய் விளங்கும் வெள்ளகால் ராவ்சாஹிப். ஸ்ரீமான். வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், 'தாமின்புறுவது உலகின்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்' என்னும் பொய்யாமொழியை மெய்யாக்கிக்கொண்டு, கம்பராமாயண இன்கவித்திரட்டு என்ற தலைப்பிட்டு நீண்டநாளாக இனிய

தொரு பொருளுரையைச் செந்தமிழ்வாயிலாக வெளியிட்டுவருவதும், அதில் முதல் ஐந்துகாண்டங்கள் முற்றுப்பெற்று இப்பொழுது ஆறாவது யுத்தகாண்டம் 'தொடங்கப்பெற்றிருப்பதும்' நம் செந்தமிழ்நேயர்கள் அறிந்த விஷயமே. இதனை யாவரும் தனிப்புத்தகமாகப்பெற்றுப் படித்தின்புறுமாறு வெளியிடக்கருதிய முதலியாரவர்கள், இப்பொழுது கம்பராமாயணசாரம் என்ற தலைப்பில் பாலகாண்டத்திலும் அயோத்தியாகாண்டத்திலும் தேர்ந்தெடுத்த பல இனிய கவிகளுக்கும் கொண்டுகூட்டு, பொழிப்புரை, குறிப்புரை, ஆராய்ச்சியுரை, கதைத்தொடர்ச்சி, பாடபேதம் முதலியவற்றால் பொருளை இனிதுவிளக்கி, தென்னிந்தியசைவசித்தாந்தநூற்பதிப்புக் கழகத்தாரால் அழகிய இரண்டு புத்தகமாக அச்சிடுவித்து வெளியிட்டிருக்கிறார்கள். இப்பதிப்பில் முன் செந்தமிழில் வெளியிடாத பலவிசேடவுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இப்புத்தகம் கம்பராமாயணம் படிப்பவர்க்கெல்லாம் மிகவும் பயன்படத்தக்கது. நல்ல காகிதத்தில் திருத்தமாகவும் அழகாகவும் அச்சிடப்பெற்றது. இதற்கு மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர். ப்ரும்மஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்களும், பண்டித ஸ்ரீலஸ்ரீ சுவாமிவிபுலாநந்தரவர்களும் முறையே தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுபகரித்த முகவுரைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றால் இப்புத்தகத்தின் நன்மைகள் இனிது விளங்கும்.

இவ்வரிய தமிழ்ப்பணியை நன்கு நடத்துமாறு இதன் ஆசிரியர்க்குப் பொருளுதவிபுரிந்து ஊக்கமூட்டியும், பல்லாற்றானும் தமிழ்வளர்ச்சிக்குவேண்டுவனபுரிந்தும் வரும் திருப்பனந்தாள்மடத்துத்தலைவர்களான ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாததம்பிரான்சுவாமிகளுடைய வள்ளன்மை பாராட்டத்தக்கது. இதன்விலை: பாலகாண்டம் ராப்பர் ரூ 1—10—0, கலிகோ ரூ 2—0—0. அயோத்தியாகாண்டம் ராப்பர் ரூ 1—6—0, கலிகோ 1—12—0. வேண்டுவோர், 'தென்னிந்தியசைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம் லிமிடெட், கீழரதவீதி, திருநெல்வேலி' என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

---



தொல்காப்பிய எழுத்ததிகாரமூலமும் நச்சினார்க்கினியர் உரையும்:—இவை, தமிழ்வித்துவான் புன்னாலைக்கட்டுவன் பிரமஸ்ரீ சி. கணேசையரவர்கள் எழுதியுதவிய உரைவிளக்கக்குறிப்புக்களுடன், ஈழகேசரி அதிபர் மகா-ா-ா-ஸ்ரீ நா. பொன்னையா அவர்களால் ராவ்பஹதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் ஞாபகார்த்த வெளியீட்டில் முதலாவதாக வெளியிடப்பெற்றது. பயில்வார்க்கு உபயோகமாகும்படி இதில் தொல்காப்பியர்வரலாறு நச்சினார்க்கினியர்வரலாறு தாமோதரம்பிள்ளையவர்கள் வரலாறு சூத்திர அகராதி உதாரண அகராதி அரும்பதவிளக்கம் மேற்கோள்விளக்கம் விஷய அகராதி அநுபந்தம் முதலியன சேர்க்கப்பட்டுள்ளன. பழையதமிழிலக்கணநூலாகிய தொல்காப்பியத்துக்கு உரைகண்டார் பலருள்ளும் இளம்பூரணரும் நச்சினார்க்கினியருமே நூல் முழுதுக்கும் உரைகண்ட பெருமையுடையவராவர். இவருள் நச்சினார்க்கினியருரை பலரால் பலமுறை பதிக்கப்பட்டுள்ளது; ஆயினும், அதனுள், பயில்வார்க்கு விளங்காத பலவிஷயங்கள் ஆங்காங்குள்ளன. அவையெல்லாம் வல்லார்வாய்க் கேட்டறியத்தக்கன. அவற்றுள் தம் நுண்மதியால் ஆராய்ந்தும், பல சிறந்த தமிழ்ப்புலவர்களிடம் கேட்டும் தாம் தெளிந்தவற்றையெல்லாம் பிறரும் அறிந்து பயன்கொள்ளுமாறு இப்பதிப்பில் ஆங்காங்குக் கீழ்க்குறிப்பாக எழுதியுதவிய ஸ்ரீ. கணேசையரவர்களுடைய பரோபகாரசீலமும், இப்பதிப்பைப் பலபல பழந்தமிழ் நூல்களை நமக்கு முதன்முதல் அச்சிட்டுதவிய பெருந்தகையினரான யாழ்ப்பாணம் ராவ்பஹதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் ஞாபகார்த்த வெளியீட்டுள் முதற்பிரசுரமாகப் பலவகையாலும் சிறக்குமாறு பதிப்பித்துதவிய திரு. நா. பொன்னையா அவர்கள் தமிழ்ப்பற்றும், தமிழ்ப்புலவர்பாற் கொண்ட பெருமதிப்பும் தமிழ்மக்களால் பெரிதும் பாராட்டத்தகும். உரைவிளக்கக்குறிப்புக்களோடுகூடிய நூல்களே இப்போது எல்லாராலும் விரும்பப்படுவன. ஏனையதிகாரங்களும் உரைகளும் விளக்கமான உரைக்குறிப்புக்களுடன் வெளிவரின் பயில்வார்க்கு மிகவும் நலம் பயக்கும். தடித்தகாகிதத்திற் பலவகையெழுத்தால் திருத்தமாக 500 பக்க அளவில் அச்சிட்டுக் கண்கவர்வனப்பிற் கட்ட (பைண்டு

செய்ய)ப்பட்டதும் இலக்கணம்பயில்வார்க்கும் நூலாராய்ச்சி செய்வார்க்கும் இன்றியமையாது வேண்டப்படுவதுமான இப் புத்தகத்தின் விலைவிவரமுதலிய அறியவிரும்புவோர் இதன் பதிப்பாசிரியரான ஈழகேசரி அதிபர் திரு. நா. பொன்னையா அவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்க.

---

தோல்காப்பியப் பொருளதிகார மேற்கோள்விளக்க அகராதி முதலியன:—தமிழிலக்கணநூல்களுளெல்லாம் சிறந்தது தோல்காப்பியமே. இது பல பெரியாருரைகளோடுகூடி ஒருபெருங்கடலாக விளங்குகிறது. இதனுள், பொருளதிகாரம் பலவகை அரும்பொருள்களைத் தந்து ரத்நாகரமாக நிலவுகின்றது. இதற்கு உரைகண்ட பெரியார் இடையிடையே எடுத்தாண்ட மேற்கோள்கள் அளப்பரியனவாயுள்ளன. அவற்றையெல்லாம் அகராதிமுறையில் தொகுத்து, பொருளதிகாரப்பதிப்புப் பலவற்றுள்ளும் இன்னாரின்னார் பதிப்பில் இன்னின்னபக்கத்தில் வந்த இன்னின்ன செய்யுட்பகுதிகள் இன்னின்னநூலில் இன்னின்னபகுதியைச்சேர்ந்தன என்று தெரிந்தவரை அட்டவணையால் விளக்கியும், நச்சினார்க்கினியர்வரலாறும் பேராசிரியர்வரலாறும் பொருட்குறிப்பும் விரிவாயெழுதிச்சேர்த்தும், நல்லகாகிதத்தில் செவ்விய எழுத்தில் 300 பக்கத்துக்கு மேற்கொண்ட அழகியபுத்தகமொன்று, தமிழறிஞர் திருவாளர் ம. ஆ. நாகமணி என்பவரால் அச்சிட்டு வெளியிடப்பட்டுளது. இது, தமிழிலக்கணம் பயில்வார்க்கும், தமிழாராய்ச்சி சரித்திர ஆராய்ச்சி தமிழ்நூற்பதிப்பு முதலிய துறைகளில் முயல்வார்க்கும் மிகவும் பயன்படத்தக்கது. ராப்பர் பைண்டு ரூ 1—4—0. கலிகோபைண்டு ரூ 1–8–0. வேண்டுவோர் 'தமிழறிஞர்' ம. ஆ. நாகமணியவர்கள் 2/21 கேசவப்பெருமாள் தெற்குவீதி, மயிலாப்பூர், சென்னை' என்ற விலாசமுடையவர்க் கெழுதிப் பெறலாம்.

---



விண்ணாரும் படிவிரும்பும் பொருநரிரும்
புறமன்றி வேலை நீர்சூழ்
மண்ணாளும் படிவிரும்பே மையர்புறநோக்
கிற்றிலவா மறந்து மன்னோ. (கச)

1848 தெவ்வரைமுன் செருக்களம்புக் கடுதனுதல்
விழிப்பிறந்து [1]தெழித்து விண்சேர்
வெவ்வழலின் பொறியன்றே யிடியேறென்
றின்றளவும் வீழ்வ தெல்லாம்
அவ்வழலன் றுயிர்த்தகொழும் புகையன்றே
மழைக்குலமென் றுய தோங்கும்
எவ்வரையு மவன்வயிரப் படைதுணித்திட்
டுலந்தவர்யாக் கையினென் பன்றே. (கரு)

1849 உலந்தநா ளொழிந்தனபூ தலத்துயிர்கட்
கியமனும்வே றுளனோ மென்னப்
புலந்தநாட் புறந்தருகூற் றிமையவர்புத்
தேளாண்மை புகுந்த தாலே
கலந்தநாள் யாவையுமெய் நடுக்குறலா
லிகலெனவுங் கருத்து றுறாற்
சலந்தவா முழவுறழ்தோட் டுணைப்பொருநன்
பெருவிறல்யார் சாற்றற் பாலார். (கசு)

1850 சுற்றுடைநாண் செறித்தவடற் சுரிகையொடுஞ்
சுவற்செறித்த தூணி யோடும்
பொற்புடைநா ணெறிந்தழுந்து தழும்பெழில்கூ
ரிடந்தழிய பொருவி லோடுங்
கற்புடைவந் நுனைப்பகழி யுடக்குவிரற்
புட்டில்வலங் கட்டி யோர்நா
ளற்புதமா னவர்திலகன் வயப்புலிவேட்
டையினெவனோ வடியிட் டானே. (கஎ)

---

[பி-ம்.] [1] தெறித்து. சா.

வேறு.

1851 நெடியி டுங்குர லொடிவில்கா னீளிடை நெடியோ
னடியி டுந்தொறு மிடுந்தொறும் பிளந்ததார் கலிசூழ்
படியி டும்பொறை பரித்தபாந் தளின்பணா மகுட
முடியி டுந்தொறு மிடுந்தொறும் பிளந்தமூ தண்டம். (கஅ)

1852 வண்டு பாண்முரன் றழுதுதா தருந்துதார் மறவோ
னெண்டி சாமுகங் குலுங்கிட நடந்தகாட் டெழுதூள்
அண்ட கோடிதட் டழிந்தநா ளுலகமைத் தளணும்
புண்ட ரீகமென் பொருட்டுளான் புவனமும் பொதிந்த. ()

1853 பரந்த கேள்விய ரொண்மைஞா னமும்படிற் றொழுக்கத்
தரந்தை யாரொடும் பழகமாய் திறனறி வுறுத்தும்
நிரந்த ரந்துகள் படிந்தொளி மழுங்கிய நிறைசால்
புரந்த ரன்றமி புரந்ததே சுறும்வியன் புத்தேள். (உ0)

1854 பொற்ப நோற்றுறு புண்ணியத் தையுந்தினம் புணர்வ
தற்ப மாயினு மகமழிப் பதையறி வுறுத்துங்
கற்ப வந்தியத் தன்றியும் புதைவுறுக் கனக
வெற்பு றண்டுகள் படுதலாற் புதைந்துள விதியே. (உக)

1855 மாண்பு டைக்கொடுந் தொழிலின னிடந்தழீஇ வரிவி
ஞாண்பு டைப்பொலிக் குருமுறு மரவுபோ னடுங்கிக்
காண்ப தற்குமுன் முழைதுறந் துருவுவெங் கணையிற்
சேண்பு லத்திரிந் தொளிப்பன வாளியின் றிரளே. (உஉ)

1856 கடன்க ளாந்தொழின் மூன்றினு ளிறுதிதன் கடனா
முடங்க லாஞ்சிலை நாணொலி யசனியின் முழக்கந்
துடங்க லான்முழை தொறுமுழை தொறுந்துவன் றனவாய்
மடங்க லான்வயப் புலிக்குல மடங்கலா மன்னோ. (உ௩)

1857 வெறிப்ப சுந்தளி நறவமா லிகையொடும் வெயில்கூர்ந்
தெறிப்ப தாகிய வாரமார் பினனைநின் றெதிர்ந்தே
குறிப்பி ழந்துகொற் றமுமிழந் தடற்கருங் கொலைசால்
பொறிப் புலித்திரள் பொறிப்புலித் திரளதாய்ப் போன. ()



1858 *வெம்பு லால்கமழ்ந் தழுபடை வேடுவன் விறல்கண்
டும்பல் யாவையும் பறந்துவான் குரல்கிளைத் தொசிந்த
கொம்பின் மொய்த்தடர் போதகத் துறுமுழை [1]குறுகாத்
தும்பி யாமெனப் புலவராற் [2]புனைபெயர் [3]துணிந்த. (உ௫)

1859 புறங்கொடுப்பவையன்றியும்பொருபடைக்கெதிர்ந்தொண்
ணிறங்கொ டுக்குநர் தடுக்குநர் நேடலு மிலரான்
மறங்க லக்குற மதுகைநாண் புடைத்துளான் விந்தப்
பிறங்கல் புக்கன னிழைத்தநல் வினைத்திறம் பெறுவான்.()

வேறு.

1860 கானகத்தார் நெறிகடந்த கனைகழற்கா
லயர்வுயிர்ப்பான் கடுங்கண் வேடன்
வானகத்தார் மதியகட்டின் மறுத்துடைக்குந்
தழைபொதுளோர் வடநன் னீழற்
றேனகத்தார் மலர்மார்பம் புனைதாந்த
னெனநாமந் திருத்தக் காணா
ஞானகத்த வடிச்சுவட்டின் மணிமுடிவைத்
துறுதுயிலே நயந்தான் மன்னோ. (உஎ)

1861 விண்ணுராய் மழைமுகிலிந் திரதனுவிற்
படரிருள்சீ மின்றொத் தீன்று
மண்ணுலாய்ப் படிந்ததிறம் பொருவருநீ
ணிறந்தழைந்த வடிவத் தாங்க
ணெண்ணிலா வலம்படுதோ ளிடந்தழிய
திருவிலொடு மெழில்கூர் மார்பத்
துண்ணிலாய் வனைபொலம்பூட் சுடரெறிப்பக்
கிடந்தவன்சால் புரைப்பின் மாதோ. (உஅ)

[பி-ம்.] [1] குறுகி. [2] புணர்பெயர். [3] துணிவார். மா.

1862 பேராசை மனநனவிற் புணர்த்ததெலாங்
கனவினுறும் பெற்றித் தென்றே
யாராயுந் திறந்தவறன் றெனவுணர்விற்
புலப்படலைவம் படையி னோடு
பேராசை புறம்பிகவா தயர்ந்தோன்முன்
னயந்தினிய பூந்து ழாய்மால்
வாராவெஞ் சமர்க்கெழுந்தா னெனவிழித்தா
னுலம்பொருதோள் வன்கண் வேடன். (௨௬)

வேறு.

1863 மாட்சி தங்கிய வுளத்தினின் மறத்தினைப் புறங்கண்
டாட்சி தங்கிய ஞானம்வந் தெதிர்ந்ததே யல்லாற்
பூட்சி கொண்டகட் புலங்கொள வொருவர்போர்க் கெதிர்ந்த
காட்சி கண்டில னழிவிலாக் காட்சியே காண்பான். (௩௦)

1864 மறந்து றந்தது மனமடங் கலினெதிர் மலைவோர்
நிறந்தி றந்தெழு விசிகமே பொழிசிலை நெடுங்கைப்
புறந்து றந்ததா யிடையினப் புறந் துறந் துரைசால்
அறந்தி றம்பலின் றுயவ ரவைக்கள மடைந்தான். (௩௧)

1865 பூத மன்னுயிர்க் கணமிறை யெனப்புகல் பவற்றின்
பேத முற்றுறு பகல்சில கழிந்ததற் பின்னர்
ஏத முற்றவவ் வுடம்பிகழ்ந் தப்புலத் தினிலோர்
வேத வேதியன் மதலையாய்ப் பிறந்தனன் விமலன். (௩௨)

1866 பண்ணி லாயதே மதுர[1]மென் மொழிகள்வாய்ப் பதுமத்
துண்ணி லாயநன் பருவமைந் துற்றபி னுரவோன்
எண்ணி லாயவர் விதித்தநாட் குரவனை யெதிர்ந்தொண்
கண்ணி லாயநூற் கடல்கள்யா வையுங்கரை கண்டான். ()

1867 அங்க மாறையு மமைவரத் தெளிந்தசிந் தையனைப்
பொங்கு மைம்புலன் பொறிவழி புணர்தராப் புலமைத்
துங்க மாதவர் வியப்புறு தூயமெய்ஞ் ஞானச்
சங்க மாமுனி யெனப்புவி புகழ்பெயர் தரித்தான். (௩௪)

[பி-ம்.] [1]கன். சா.



1868 பவம் புணர்ந்தபுன் பழவினை யெனுமிருட் படலந்
தவம் புணர்ந்தநுண் மதியெனு மதிக்குடை தருமால்
அவம் புணர்ந்தமற் றவையெனு நுணங்கிய வறிவின்
நவம் புணர்ந்துநற் றவந்தொடங் குவனென நடந்தான். ()

1869 உம்பர் யாவரு மருந்தவ மொடிவிலா துளுற்றுஞ்
செம்பொன் மால்வரைச் சாரலென் றமைந்ததென் புலத்தா
யிம்பர் யாவையுந் தனுதுபொங் கரினகத் திடுமோர்
சம்பு நீழலிற் சம்புநன் னதிக்கரை சார்ந்தான். (௩௬)

1870 யாவ ரேனுமிச் சிப்பதிச் சையினரு ளதன்கண்
மூவ ராங்கட வுளரையு மொருங்குறு முழுதுங்
காவ லாந்திசைக் கடவுள ரெண்மர்க்குங் காவற்
றேவ னும்பதம் பெறுவதற் கருந்தவஞ் செய்தான். (௩௭)

1871 அளிந்த தீங்கனி காய்கிழங் கடகருந் துவபோய்
முளிந்த வன்சரு கருந்தலுந் தவிர்ந்தனன் முறையே
குளிர்ந்த தெண்புனன் மிசைதலுந் தியானசிற் குணத்தாற்
றெளிந்த சிந்தையன் வாயுவே யுணவெனத் தீர்ந்தான். ()

1872 வான்சு ரந்துகு பஃறுளி யெனமதர் விழிக
டான்சு ரந்துகு மருட்கணீர் நதியினுந் தழையத்
தேன்சு ரந்துகு தெரியன்மார் பினன்றவந் திளைத்த
[1]தூன்சு ரந்துகு குலிசன்விஞ் சையர்களி னுணர்ந்தான். ()

1873 திடங்கொ ளுன்மறை முதலிய பனுவல்க டெரிந்தே
யிடங்கொ ளுண்மதிப் புலவரோ டுறுதிசூழ்ந் தினிதாய்
நடஞ்செய் பேரரம் பையர்தமை நகைபெரி துடையோன்
றுடங்கு மெய்த்தவந் துடைப்பதற் கேவினன் சுரர்கோ. ()

1874 போதி யந்தணன் புவனமும் பூட்சியா தியவும்
ஆதி மன்னுயிர்க் கணங்களுக் கருந்தலும் புணர்வும்
நீதி யானமைத் தவற்றினு னீடுபோ கமதோர்
சாதி யாம்படி மறித்தமைத் தனனெனுந் தகையார். (௪௧)

[பி-ம்.] [1] லூன் சுரந்துகு. ச.

1875 புலன்க ளைந்தையும் புறக்கொடை கண்டுளார் பொறியின்
குலன்க ளைந்தையு மிடர்செயக் குறிக்கொளப் புலன்க
ணிலன்கள் யாவையும் புணர்த்துளா னினைவுநேர் படுமப்
பலன்க ளாலரம் பையர்களா யினவெனப் படுவார். (சஉ)

1876 நோற்ற நோன்பினாற் றுறக்கமுற் றவர்களுண் ணுணர்வி
னாற்றல் சானிறை யழிப்பதற் கறிகுறி கரந்தே
கூற்றமெண்ணில்பெண் ணுருவமாயினதெனுங் குறித்தாய்த்
தோற்ற மேயவ ரெனத்துறக் கமுந்துணி தொடர்பார். ()

1877 அஞ்ச லஞ்சலென் றமுதமு தருளுநாண் முதலு
நஞ்ச மாகிய துயிர்கொடா திரிந்தவா னவர்தந்
நெஞ்ச மையுறு தருத்துவித் துணர்வினு ணினைவான்
வஞ்ச வேடமோ டரம்பைய ராயமாட் சியினார். (சச)

வேறு.

1878 ஓவிலாச் சுரர்க்குளத் துருகி யெம்பிரான்
நாவினாற் சுவைகொள நயந்த தன்றியே
தாவிலா முதியகட் கினிமை சால்வதாய்ப்
பூவினான் படுத்ததெள் ளமுதம் போலுவார். (சரு)

1879 நெய்யினிற் றோய்த்தபோ னறுவிதாய் நிழன்
மையினிற் றோய்த்தபோ னிருண்டு வான்பிடிக்
கையினிற் பின்னியே யெருத்திற் கண்டஞான்
றுய்யுமே யுலகென வீழ்ந்த வோதியார். (சசு)

1880 இண்டையா சனத்துளா னெழிலிக் கிம்பராய்க்
கண்டவான் பிறைபுரை நுதலின் காட்சியார்
தொண்டைவா யொழிவறச் சுரந்த தெள்ளமு
துண்டவா யமுதுணா தொழிக்கும் பான்மையார். (சஎ)

1881 புரிகதி ரிளம்பிறை புனைந்த வேணியான்
எரிதரு விழிக்குரு விழந்த காமனை
விரிதிரை யமிழ்தம்வீற் றிருக்கு மேன்மைசால்
அரிமதர் மழைக்கணா லளிக்கு நோக்கினார். (சஅ)



1882 முல்லைநன் முகையெனு முறுவ லார்மதன்
வில்லையும் பழித்தவார் புருவ வில்லினார்
கொல்லயில் விழிபொருங் குழையி னார்கருங்
கல்லையு மிரும்பையுங் கரைக்குஞ் சொல்லினார். (சகூ)

1883 விழுக்கலை நுணங்குரன் மேய வேதியன்
அழுக்கறுத் தொளிநிறீஇ யடைவிற் றேய்ந்திறும்
வழுக்களைந் தம்புய மலர்ச்சி மேல்செயு
முழுக்கலை மதியெனு முகத்தி னார்களே. (ரு௦)

1884 கன்னிநா ளிளங்கமு கென்னுங் கண்டத்தார்
கொன்னிறப் பசுங்கழை குழைமென் றோளினார்
பொன்னிதழ்த் தாமரைப் போதுங் காந்தளும்
நன்னிக ரலவென நகுமென் செங்கையார். (ருக)

1885 சாந்தமாஞ் சிற்குணந் தழைந்த தாவிலே
காந்தரா சையையறுத் தடங்கு சிந்தையாம்
வாய்ந்தவல் லிரும்பினைக் கவரு மாண்புடைக்
காந்தமால் வரைபுரை காமர் கொங்கையார். (ருஉ)

1886 நறவினாற் சிறந்தொளி நயந்த பூமக
ளுறவினா னுறவினை யுவந்த வொண்மைசார்
துறவினா ரிருவினை துடைத்த மாசிலார்
பிறவிபோற் றேய்ந்தெழில் பெறும ருங்குலார். (ருங)

1887 ஆய்ந்தமா மணிமயி லணங்கு சாயலார்
பாந்தளின் படம்புரை பரவை யல்குலார்
பூந்தண்வா ழையும்பொறி வராலு நேரெனுங்
காந்தியூ ருவுங்கணைக் காலு மேயினார். (ருச)

1888 அஞ்சிறை யெகினச்சூட் டனிச்சப் போதுநன்
பஞ்சினை யடர்ந்த [1]வொண் டளிமப் பாயன்மேற்
சஞ்சரித் திடினுநோ தகுமென் சாயல்கூர்
கஞ்சநாண் மல[2]ரடி கவினென் சொல்வதே. (ருரு)

---

[பி-ம்.] [1] வெண். ச. [2] ரடிக். சா.

1889 ஈங்கிவர் குழாந்தனக் குவமை யேமவான்
பூங்கொடி பொனங்கொடி புதிதொர் மின்னினுண்
டாங்கொடி மதனுல கடக்கு மாணையால்
ஓங்குநற் கொடிபல குழீஇய தொன்றுமே. (ருசு)

1890 புரந்தர னேவலிற் போந்து பொன்றிடா
வரந்தரு சம்புமா நதிக்கண் மன்னியே
பரந்தகேள் வியன்றனைப் பாங்க ரெங்கணும்
நிரந்தற வளைத்தனர் நிலைது ளக்குவான். (ருஎ)

வேறு.

1891 *நெய்த்திருண்டு சுருண்டுகடை குழன்றறலின்
கெழுதகைத்தாய் நெறித்து நீண்டு
மொய்த்திருக்குங் குழற்காட்டின் முகையவிழ்பூந்
துணர்விரையு [1]முழுதுந் தாங்கி
யெய்த்திருக்கு மிடைக்கிடர்மே லிடரிழைக்குந்
[2] திறந்துணிந்தே யிறுமாந் தொண்பூண்
வைத்திருக்கு [3]முலைக்குவட்டிற் செறிதருமான்
மதவிரையும் வளைந்த மன்னோ. (ருஅ)

1892 பொலம்புனைகிண் கிணியரவ நூபுரா
ரவமணியும் பொன்னும் வேய்ந்த
நலம்[4]புனைமே கலையரவ மரிமயிர்முன்
கையிற்செறித்த நளிநீர் வேலை
வலம்புரியாற் குயின்றவரி வளையரவ
மெல்விரலால் வருடும் யாழின்
குலம்புரிதீந் தொடையரவந் [5]தழைந்ததுவா
னவருயிருங் குழைந்த தன்றே. (ருகூ)

1893 ஐவ ரானிலை யழிந்திடா தருந்தவ மதுபேணுந்
தெய்வ மானிட னேந்தெழின் மேனியைத் தெரிசித்தா
லைவ தன்றியே நாளொடு நிறையிவை நனிபேணி
உய்வ தாரென வுரைத்தன ரரம்பைய ரொருசாரார். (சுo)

[பி-ம்.] [1] முற்று முன்னர். [2] தமர்போலு மிறுமாந். [3] முலைமுகட்டிற்
பொதிகளபத் தொளிவிரையும். மா, [4] புணர். ச. [5] தழைந்து. சா.



1894 பெறுவ தொன்றிலை யாகியும் வரைந்தவர் பின்போய்நா
ணுறுவ தாமரம் பையர்களே நிறையொடு மமைவார்கள்
மறுவின் மானிட மகளிரு நிறையொரீஇ மடலேறற்
குறுவதொன்றிவன்வனப்பெனவுரைத்தனரொருசாரார். ()

1895 சிவன தாருயி ரெனத்தகு வனப்புடைச் செவ்வேளைப்
புவன மூன்றளந் தவன்றரு கரியவே ளுடன்போற்றி
இவன தேந்தெழிற் கெதிர்நிறீஇ யிருநிலத் தவர்காணி
னுவமை சால்பவ ரல்லரென் றுரைத்தன ரொருசாரார். ()

1896 கவர்த்த சிந்தையை யொருவழி நிறுத்திய கலைகண்ணோன்
தவத்தொடொன்றுவதன்றெனக்கழித்ததோதகைசால்பூ
ணவர்க்குமன்பருளுறுப்பினதெழின்மறைத்திடுமென்றே
யுவர்த்ததொன்றெனவுவப்பினின்றுரைத்தனரொருசாரார்.

வேறு.

1897 தொடித்தடக்கை மெல்விரலால் வைகலும்புட்
டொழுதியொடுஞ் சுழலக் கொய்தே
வடித்தபனி மலர்செருக முகிற்கணத்து
ளுடுக்கணத்தை மருட்டு மைம்பான்
முடித்தகருங் குழற்கோதை குலைத்துதறி
முடித்தாம்பன் முறுக்குண் மெல்ல
வெடிப்பனபோன் றொளிர்கனிவாய்க் குறுநகைவந்
தரும்பமயல் விளைப்ப ரோர்பால். (சுச)

1898 வடவரைப்பொன் னெடுங்குடுமி போந்தமர்செக்
கரினிறமே வளர்க்கு மேன்மைத்
தடமுலைக்கண் வீக்கியசெம் பட்டணிபு
முத்தரியந் தளர வாடும்
படவரவம் புரையல்குற் கலைதளர
நிலைதளரும் பாண்மை கூர்ந்து
நடவரவப் பரிபுரம்வீ ரிடும்படிநின்
றடிபெயர்த்து நடிப்ப ரோர்பால். (சுரு)

வேறு.

1899 வளர்பொற் சயில மெனப்பணைத்த
மறையோன் மணிமார் பகமுழக்கிக்
கிளர்பொற் றடந்தோ ளிணைத்தழுவிக்
கெழுமித் தடங்காக் களியினெடும்
புளகித் திலவாற் பரிந்தெவனோ
புனைபூண் முலைக்கு மென்றேட்கு
மிளகப் பொதிமான் மதக்குழம்போ
டெழுதத் தகுங்குங் குமமென்பார். (௬௬)

1900 தொழுவார் நறுமென் மலர்தூவிச்
சுருளோ தியுறத் துணையடிக்கீழ்
விழுவார் திருமே னியைத்தழுவ
மேனாட் டவஞ்செய் தவராரென்
றழுவா ரொருநா ளுளதேநின்
னருமைத் திருமே னியையடியேந்
தழுவா நலன்பெற் றிடக்கருணை
தருநா ளெனமெய்ந் நிறைதளர்வார். (௬௭)

வேறு.

1901 வார்பெருகுந் தனச்சுவட்டிற் பசலைதழைந்
திந்திரமா ஞாலத் தாகம்
வேர்பெருக மயிர்ப்புடைக ளொருங்குசிலிர்த்
தாவித்தன் மேன்மே லெய்த
வார்புருவச் சிலைகுனித்து மடநோக்கின்
மதாரிக்கண் வாளி கூண்டெய்
தார்புடையோ னறிவெனுமவ் விலக்குடைவான்
பொனங்கொடிபோன் றரம்பை மாதர். (௬௮)



1902 பொன்றவா நிழன்மணிமே கலையல்குற்
றலந்துறப்பப் புயலி னீர்மை
வென்றவார் குழல்விரித்து முலைமுகட்டி
னுத்தரியம் விரைவி னீக்கிக்
குன்றவாற் றிடைப்படிந்தங் கொருவரொரு
வரைத்தழுவிக் குறிப்பி னோக்கி
நின்றவா வினையெழுப்ப விறைவரையங்
கிறைபிரியா நினைவி னின்றான். (௬௯)

இரண்டுந் தொடர்.

வேறு.

1903 நின்றி ரப்பவர் நிரப்பறப் பலவகை நிதியீனு
மன்ற லைந்தரு மலர்களை மலர்க்கரங் களின்வாரிச்
சென்று தாள்களிற் சொரிதரச் சொரிந்ததே னினதீர
மொன்று முற்றில னீரம தூறமுரா னுடையோனே. (௭0)

1904 இரைத்தி ரைத்தெறி திரைக்கடல் வளாகமு மிமையோரு
நிரைத்தி ரைத்தன ராய்மதித் திடுநின தெழில்காட்டிக்
கரைத்தி யெம்முயிர் கரைதபா வகைகளை கண்ணுமொன்
றுரைத்தி யென்னவு முரைக்கிலன் முதன்மறை யுரையோனே. ()

1905 ஆக்கை யன்றியெம் மாவியுந் தளிர்த்திட வடியேங்கண்
ணோக்கு கின்றதென் றென்றரம் பையர்நுவல் போழ்து
மூக்கை நோக்கினு மூவரை மூதுணர் வினுநோக்கி
நீக்கி யொன்றையு நோக்கில னேக்கமே நிலைபெற்றான். ()

1906 அவிக ளாரமு தருந்தினர் செவிதமக் கமுதாகக்
குவித ராவுறு மதுரமென் மொழிகுற கினராகிப்
புவியு ளார்வியப் புறவரு ளுதியெனப் புகல்போதுஞ்
செவிகொ டுத்திலன் கேள்விகள் பலவுறுஞ் செவியாளன்.()

1907 ஆற்றன் மேயின வழுதினுட் பிறக்கவு மமரேசன்
போற்றன் மேயின துறக்கமெய் தவும்புரிந் தவற்றேடுந்
தோற்ற மேயின நினதிடத் தின்பமுந் துய்ப்பான்முன்
னேற்ற நோன்புமொன் றிலமினி யெவன்பல நுவன்றென்பார். ()

வேறு.

1908 மண்மிசைவா ணிகத்திறத்தோர் பொருள்கொடுத்தூ
தியங்கொளற்கு வாய்ந்து ளோர்கள்
எண்ணியவூ தியமிழந்து முதலினைக்கொள்
வதற்கரிதா யிரங்கல் போன்ற
தண்ணலின்மெய்த் தவமழிய வுணர்வினொடும்
புகழ்கோடற் கவன்பா லுய்த்த
கண்ணையுந்தங் கருத்தையுமீட் பதற்கரிதாய்
நிறைபழிந்து கழிதன் மன்னோ. (எரு)

1909 கலையுடையோ ருயிர்பொதிந்த மெய்ஞ்ஞான
மெனுமிருப்புக் கவசங் கன்னற்
சிலையுடையோன் மலர்ப்பாணந் தனக்கழியாத்
திறந்தெருளாச் செம்பொன் மேரு
முலையுடைவா னரமகளிர் முகங்கருகி
மறைந்திடவிண் முழுதுங் காவ
னிலையுடையோ னெவன்செயலென் றிருப்பவவ
ணாதனு நேர்பட் டானே. (எசு)

1910 செழுந்தவிசின் மிசையிருந்து துறக்கமுழு
வதும்புரந்து தேவர் நாளுந்
தொழுந்தொறுந்தண் ணளிபுரிந்து பகட்டயிரா
வதப்பிடர்மேற் றோன்றுங் கோமா
னெழுந்தனனு மனங்களிபெற் றடியிணையேத்
துபுமறுவொன் றில்லா ஞானக்
கொழுந்தெனவாழ் வரமுனிவர்க் குய்ப்பனயா
வையும்பரிவிற் குறையா துய்த்தான். (எஎ)

1911 புரந்தரனுர் வழிபடுமப் பூசனைகைப்
பற்றியபின் புவனம் போற்றும்
வரந்திகழ்நா ரதமுனிவன் பொன்னுலகம்
புரந்தமுத மதிப்பின் மாந்தி



நிரந்தரநால் வகைத்தெனுமெண் ணுடைத்தேவர்
தொழக்களியி னிலைபெற் றோங்கு
மரந்தையுறு நினதுமனத் தாந்தையெவன்
பயின்றதென வறைந்தான் மன்னோ. (எஅ)

1912 அறந்திகழ்பொன் னுலகுபுரந் தமுதருந்திச்
சுவைதருமவ் வமுதில் வந்த
திறந்திகழைந் தருமுதலா நிதிபடைத்த
மனக்களியுட் சிறிது துன்பம்
பிறந்துளவா மெனிலதுவு நினதுமுகத்
தெரிசனையே பெற்று ளேற்குப்
புறந்தருவ தல்லாலிங் கெதிர்வருதற்
றிறமுளதோ புனிதா வென்றான். (எகூ)

1913 பிறங்கலினைக் கொடுங்கடுங்கால் விழுதெறிந்து
குளிறியெழப் பெருநீர் மண்டிக்
கறங்கலைவா ருதியினொடும் புறக்கடலொன்
றியநாளுங் கவர்த்த லில்லாத்
திறங்கிளரொண் மதியுடையோய் மேருவின்பாற்
சம்புநதிச் சிவணி ஞான
மறங்கிளர்மெய்த் தவம்பயின்றோ னினைவெவனென்
றுனுரைத்தான் மாசி லாதான் (அ0)

1914 வேடுவர்தங் குலமதலை [1]யிவன்முனைநாட்
டாந்தனெனும் வினைஞன் ஞானப்
பீடுடையோ னடித்துகள்சென் னியிற்பரிசித்
தத்துகண்முற் பிறப்பி லுண்டாய்
நீடுகொடும் பவந்தொலைத்தவ் விழிதொழில்கூ
ரழிகுலமு நீக்கி யாருங்
கூடுவதற் கரியவறு தொழின்மறையோர்
பெருங்குலமுங் கொடுத்த தன்றே. (அக)

---

[பி-ம்.] [1] யிவன்முதனுள். சா.

1915 அருமறையோர் குலத்துதித்தோன் மன்னுயிர்நன்
னிலைபெறுதற் கனந்த ஞானந்
தருமறையா தியவுணர்ந்து புலன்களைவென்
றனனாகித் தரங்க நாளும்
பொருமறைவா ருதிப்புவனத் திசைபுரப்போ
ரெண்மருந்தற் புகழ்சால் பெய்தப்
பெருமறையுட் கொண்டதவந் தொடங்கினன்மே
லுறுபயனும் பேசக் கேணீ. (அஉ)

1916 மறவினையா லும்மையினுண் டாயபவ
மடிமுடிமேன் மரீஇய தாநல்
லறவினையாற் றொலைந்தனவிப் பிறவியினுண்
டாயநினை வமிர்த யாக்கை
துறவினைகூர்ந் தலர்மகள்கோன் பேரின்பம்
பெறுவதற்குத் தொடர்புண் டாகப்
பிறவினையுய்த் திடுந்துயராக் கடலகத்தா
ழாகொளெனப் பெயர்ந்திட் டானே. (அங)

இரண்டுந் தொடர்.

1917 குடவயிற்று வரிவளையின் குலங்குளிறு
திரைதருகைக் குன்றெஞ் ஞான்றுங்
கடவயினெட் டிலைக்குலிசன் றமரொடுமாழ்ந்
திடுகவலைக் கடலை நீக்கிப்
படர்கதிர்வெண் மதிக்கடவுள் விசும்பிழுக்கி
நிலத்திழியும் படித்தாய் நல்யாழ்
இடவயிற்கொண் டெழிலி[1]யினின் றிழிதருநா
ரதப்பிரம விருடி மன்னோ. (அச)

வேறு.

1918 மூவிரண் டுறுப்பிற் றூய முதியசெங் கோட்டி யாழின்
மேவுதீந் தொடைக ளேழும் பண்ணுறீஇ விரலின் மெல்ல
நீவியே தாளங் கால நிகழ்தரு கிரிகை மானம்
[2]பாவிய தெய்வ கானம் பாடவே துடங்கி னானே. (அரு)

[பி-ம்.] [1] யுணின். க. [2] பாவியற் றெய்வ. க.



வேறு.

1919* வண்டுலவுந் [1]தண்டுளபப் பெம்மானே
யனைத்துயிர்க்கும் வசதி யாய
வண்டாண்ட பகிரண்ட மகத்தடக்கு
முழுமுதனீ யாயிற் றென்றாற்
பண்டுலக [2]மனைத்தினையு மயிலெயிற்றா
லிடந்தளந்த பான்மை யல்லா
தண்டுமிழ்ந்த படியயல்கண் டிருந்தவரா
ரெவணிருந்தன் றண்ட வாறே. (அசு)

1920 பாதகவல் லிடங்கரகப் படுத்தியநாண்
மூதண்டம் பகவே வேழ
நோதகவன் றுரைத்தவொலி யடங்குமுனம்
வெறுநிலத்து னொய்திற் றாவிப்
பீதகவா டையுங் குலையப் பிடர்க்குழையுங்
குஞ்சியொடெம் பெருமான் வந்த
மேதகவைச் சிறுவரையு மறப்பரோ
மதிநுட்ப மேயி னாரே. (அஎ)

1921 பங்குளா னெனுமுமைநா யகன்குலிசன்
பிரமனெனப் பகர்வோ ரச்சந்
தங்குளா ரெனவொளிப்ப விரணியா
நமவெனச்சொல் சத்தத் தான்மா
லெங்குளா னெனுமளவி னெங்குமுளா
னென்றபொழு தெற்றுந் தூணத்
தங்குளா னெனமதலைக் குதித்தநிலை
யயர்ப்பரோ வளியு ளாரே. (அஅ)

[பி-ம்.] [1] தண்டுளப மாயோனே. [2] மனைத்தையுமோ ரயிலெயிற்றா; மனைத்தையுமோ ரடலெயிற்றா. மா.

1922 வல்லிருக்குங் கனதனச்சிற் றிடைப்பவளத்
துவரிதழ்வாண் மாமை யுண்கண்
ணல்லிருக்குங் குழற்றெரிவை கொழுங்கலவி
நலங்கவர்வா னழியா வென்றி
வில்லிருக்கு மிதிலையினீ புகுநாளிற்
கணைகழற்கான் மேய்நண் [1]பூழி
கல்லினைப்பெண் ணாக்கியது மறப்பரோ
பேரின்பக் காட்சி யாரே. (௮௯)

1923* குன்றுபோற் புடைத்தெழுந்த தனத்தாளைச்
சிறைவைத்த கொடுமை யானைத்
துன்றுபோர்க் களத்தெதிர்ந்து தொடுகணையான்
முரணழியத் துயரம் பூட்டி
யின்றுபோய் நாளைவா வெனவிமையோர்
கணம்பரவ வெம்பி ரானே
யன்றுபோர்க் களத்துரைத்த தறநிலையோ
மறநிலையோ வறிகி லேனே. (௯0)

1924 மட்டுண்ட களியளிப்பூ மகண்மருமத்
திருப்பவிடை மகளிர்க் காசைப்
பட்டுண்ட பதினாலு புவனத்தாற்
பசியடங்காப் படித்தாய் வெண்ணை
கட்டுண்டங் குரலினொடுங் கட்டுண்டு
புனலிருகண் கலுழ மத்தாற்
கொட்டுண்டன் றெளிமையுறு நின்றகையா
தெனக்குறிப்பார் குறிப்பு ளாரே. (௯௧)

1925 இந்திரற்கு விழவுபுரிந் தேந்துமவி
களைப்பொருப்புக் கீமி னென்றே
சந்தயத்தி னிலைகுறுகா ததனுருபா
யவையனைத்துந் தானே மாந்தி

[பி-ம்.] [1] பூழிக். சா.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கணுநல் (5) இனியநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் ... ... ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) .. | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... ... | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா ... ... ... | | | |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 35. | *திருமந்திரநூறுபாட்டுக்குரை ... ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையவுரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | *கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில்அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 33 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.